மலர் 1 இதழ் 6

2200 1918

# ஞானோதயம்

நன்மைக்குரிய நாகரீக ஞானத்தை நல்கும்
ஓர் நற்றமிழ்ப் பத்திரிகை.

(மாதந்தோறும் வெளிவரும்)

பகைப்படவாழாதார் தக்கோரவர் தம்மை
மிகப்பட்டாரை நோவதென்.—திருக்குறள்.

காளயுக்தி ௵ புரட்டாசி ௴
1918-ம் ௵ செப்டம்பர் ௴

பொருளடக்கம். பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் ... ... ... ... | 161 |
| 2. | யோகம் ... ... ... ... | 162 |
| 3. | பகவத்கீதை ... ... ... ... | 164 |
| 4. | கர்ப்பிணிகள், தத்தமூலமாய்ச் சிசுக்களை யுபதேசித்தல் | 166 |
| 5. | குருடர் கைகளால் பார்த்தல் ... ... | 166 |
| 6. | சுகாதாரம் ... ... ... ... | 167 |
| 7. | ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸதேவர் திருவாய்மொழி | 171 |
| 8. | அபின் ... ... ... ... | 175 |
| 9. | ஓர் வேண்டுகோள் ... ... ... | 178 |
| 10. | தூத்துக்குடி காரப்பேட்டை ... ... | 179 |
| 11. | நாடார்கள் முற்கால தற்கால நிலைமை ... | 179 |
| 12. | பொதுவிஷயங்கள் ... ... ... | 187 |
| 13. | புத்தகத்திறப்புகள் ... ... ... | 188 |
| 14. | நாவல். ... ... ... ... | 190 |


பத்திராதிபர் :—சிவ. பெ. ராமலிங்க நாடார்,
தூத்துக்குடி.

1918

JL
M18·1·6.
210789

உ.

# ஞானோதயம்.

இஃது கல்வி, ஞானம், பக்தி, நாகரீகம், பாஷாபிவிருத்தி, வியாபாரம், கைத்தொழில், விவசாயம், வைத்திய மாதிய பலவகைச் சாஸ்திர ஆராய்ச்சி, ஆசாரச் சீர்திருத்தம், பொது விஷயங்கள், பெண்கள் மாணவர்களுக் குறிய விசேஷ விஷயங்கள், நாவல்கள், முதலிய பல அரிய விஷயங்கள் அணிந்து வெளிவரும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. நாவல் முதலாகிய பல விஷயங்கள் இதில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப் பெறுமாதலால் நேயர்கள் சென்ற சித்திரை மாதத்திலிருந்தே சந்தா தாரராகச் சேர்ந்து பத்திரிகையை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு சேரும் சந்தாதார்கள் தங்கள் தங்கள் முழுவிலாசங்களைத் தெளிவாய் எழுதியனுப்ப வேண்டும். இருப்பிடம் கிராமமாயிருந்தால், அது எந்த ஊர்த் தபாலாபீசைச் சேர்ந்தது என்று விவரத்தையும் குறிப்பிட்டெழுதி யனுப்பவேண்டும்.

## விஷயதானம் செய்யும் விற்பனர்களுக்கு வேண்டுகை.

விஷயதானஞ் செய்வோர்கள், ஜாதி மத தூஷணை சாராது பத்திரிகையின் மேற்கூறிய நோக்கங்களை அநுசரித்த விஷயங்களைத் தெளிவான தமிழ் நடையில் எழுதியனுப்புமாறு வேண்டுகிறோம்.

## சந்தா விபரம்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இந்தியா பர்மா சிலோன் ஆகிய இடங்களுக்குத் தபாற் கூலி யுள்பட ஒரு வருஷத்திற்கு ... ... | 2 | 0 | 0 |
| பினாங்கு சிங்கப்பூர் தென் ஆபிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு தபாற்கூலி யுட்பட ஒரு வருஷத்திற்கு | 2 | 8 | 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 | 4 | 0 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்த காலசந்தா கிடையாது.

## விளம்பர விகிதங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாசத்திற்கு .... ... | ரூ. | 4 | 0 | 0 |
| அரைப்பக்கத்திற்கு ஷை ... ... | ரூ. | 2 | 0 | 0 |
| கால்பக்கத்திற்கு ஷை ... ... | ரூ. | 1 | 0 | 0 |

எப்போதும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

சிவ. பெ. ராமலிங்க நாடார்.
ஞானோதயம் ஆபீஸ்,
தூத்துக்குடி.

கடவுள் துணை.

# ஞானோதயம்

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"—திருவள்ளுவர்.

மலர் I | காளயுக்தி ஹூ புரட்டாசி மீ 1918-ம் ஹூ செப்டேம்பர் மீ | இதழ் 6

## கடவுள் வணக்கம்.

எல்லாமு னடிமையே யெல்லாமு னுடைமையே
யெல்லாமு னுடைய செயலே
யெங்கணும் வியாபிநீ யென்று சொலு மியல்பென்
னிருக்காதி வேதமெல்லாம்
சொல்லான் முழக்கியது மிக்கவுப காரமாச்
சொல்லிறந்தவரும் விண்டு
சொன்னவையு மிவையல்ல குருவான பேருந்
தொகுத்த நெறி தானுமிவையே
அல்லாமலில்லையென நன்றா வறிந்தேக்
னறிந்தபடி நின்று சுகநான்
ஆகாத வண்ணமே யிவ்வண்ண மாயினே
னதுவுநின தருளன்னவே
கல்லாத வறிஞனுக் குள்ளே யுணர்த்தினை
கதிக்கு வகை யேதுபுகல்வாய்
கருதரிய சிற்சபையி லானந்த நர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

தெவ்வினைபா ராக்கர்குலஞ் செற்ற வெற்றிச்
சிங்கமே யெங்கள் குல தெய்வமே
வெவ்வினை தீர்த்தருள்கின்ற ராமராம
வியன் சுடரே யுவ்வுலக விடயங் காட்டில்
இவ்வினையேனகப்பட்டேன் புலனுங்கள்ளர்க்
கிலக்கானேன் றுணையொன்று மில்லேனந்தோ
செய்வினை யொன்றறியே னிங்கெனையெந்தாய்
திருவுளத்திற் சேர்த்திலையேற் செய்வதென்னே.

2/0789

# ஞானோதயம்.

## யோகம்

130-ம் பக்கத் தொடர்ச்சி.

அணிமா வென்பது ஒருபச்சோந்தி தன் சுவாசத்தை வெளிவிட்ட மாத்திரத்தில் தளர்ந்து மெலிவதுபோல அடயோகி தன் சுவாசத்தை ரேசிப்பதால் அணுத்தன்மை யடைவது.

மகிமா வென்பது அப்பச்சோந்தி தன் சுவாசத்தை உள்ளுக்கிழுத்த மாத்திரத்தில் நிரம்யாறித் தேகமுழுவதும் புடைத்து உருளையாய்த் திரளும். அதுபோல அடயோகி தன் சுவாசத்தை மார்புங் குடலும் புடைக்கும்படி பூரிப்பதால் மகத்துவத்தையடைவது.

லகிமா வென்பது அடயோகி யானவன் நீடித்த பழக்கத்தினால் வயிறு, மார்பு, குடல் நிறைய அதிக வாயுபக்ஷணஞ் செய்து தனது சரீரம் சுரைக்குடுக்கைபோல் கனக்குறைவாய் ஜலத்தில் மிதக்கவும், அந்தரத்தில் நிற்கவும் சக்திவந்தடைவது. இது லம்பிகா யோகமெனவுஞ் சொல்லப்படும்.

கரிமா வென்பது அடயோகி அதிகவாயு பக்ஷணஞ் செய்து அந்தவாயுவைக் கொண்டு தனது சரீரத்தை அழுத்தும்படியான சாதனஞ் செய்வதனால் அந்த யோகியின் சரீரம் அதிக கனமாய் விடுகிறது.

பிராத்தி யென்பது அடயோகி சுவாசபந்தனஞ் செய்து சரீரவாசனையை விடுத்து விலகிநிற்கையாலே திரிகால வுணர்ச்சியும், தனக்குத்தெரியாத பாஷைகளின் தாற்பரியங்களைத் தெரிந்துகொள்ளுதலும், அன்னியர் எண்ணங்களைத் தெரிந்துகொண்டு வெளிப் படையாய்ச் சொல்லுதலும், நெடுந்தூரத்திலுண்டாகும் சப்தங்களைக் கேட்டறிதலும், அவ்விடத்திருக்கும் வஸ்துக்களைப் பார்த்தலும், மிருக பட்சி பாஷைகளைக் கேட்டுணர்தலும், தன்னெதிரிற் சந்தித்த வெல்லாமனிதர்களின் எல்லா வியாதிகளையும் நிவர்த்தித்தலுமாகிய இவ்வித அற்புத சித்திகளை யடைவது.



பிரகாமியம் என்பது தன்சரீரத்தை விட்டு வேறொரு சரீரத்தில் பிரவேசிக்கவும் திரும்பவும் சக்தியடைவது. இதை கூடுவிட்டுக் கூடுபாய்வதென்றும் பரகாயப் பிரவேசமென்றும் சொல்லப்படும்.

ஈசத்துவம் என்பது அடயோகி இந்திரியங்களை யடக்கி சலனமற்று நிற்க ஆத்ம தரிசனஞ்செய்த பினலர், நீடித்த பழக்கத்தினால் தானே பிரம்ம சொரூபமாய்த்தனது திருஷ்டிக்குச் சகல ரகசியங்களுந்தோன்றுவதுடன் திரிகால வுணர்ச்சியு முண்டாய் மாயை தன் வசப்பட்டிருக்க, எழுவகைத் தோற்றங்களினு நீங்கிச் சர்வசாட்சியாய்ச் சுத்த சைதன்னிய மாத்திரமாய்ச் சாயுச்சியத்திற் கலந்துநிற்பது. அவ்வாறு கலந்த யோகி ஈஸ்வரனாற் செய்யப்பட்ட பஞ்சகிருத்தியங்களைச் செய்யவும், மரித்தோரை யுயிர்ப்பிக்கவும் சித்தியடைவான்.

வசித்துவம் என்பது இதை அப்பியாசிக்கும் அடயோகி மிருகபட்சி முதலாகிய திரியக்குகளைத் தன்வயப்படுத்தித் தான் ஆக்யாபித்த தொழில்களைச் செய்யும்படி சித்தியடைவது. இதை ஜகத் வசியமெனவும் சொல்லப்படும்.

இவ்வித அஷ்டமாசித்திகளும் கைவரப் பெற்றவனுக்குப் பில்லி பேய் பூதபைசாச முதலிய சேஷ்டைகளும் நவக்கிரகங்களால் விளையும் பீடைகளும், நாலாயிரத்தி நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளும் அணுகாமலும், அவ்விதபீடைகளுள்ளவர்களுக்கு நிவாரணிக்கும் வல்லபமும் அரோக திடகாத்திரமும் நீடித்த ஆயுளும் உண்டாவதுமன்றி, எவ்வுலகத்துஞ் சஞ்சரிக்கவும் எவ்வுலகத்து நடக்குஞ் செய்திகளையும் இருந்தவிடத்திருந்தே யறியும் வல்லபமுமுண்டாகும்.

முற்கூறிய அடயோக சாதனங்களை, இத்தூலசரீரம் அழியாமல் நீடூழிகாலம் எவ்வன பருவத்தோடு வைத்திருக்கவேண்டுமென்ற இச்சையுடையோரே அனுஷ்டிப்பார்கள். அவ்வாறு அனுஷ்டிப்போர்களும் மனித சஞ்சாரமில்லாத யிடத்தில் வசித்து நித்திரைபயம் மைதுனமற்று அறுசுவையுணவு நிவர்த்தித்து பிரபஞ்ச வாசனையை விலக்கி அல்லது நீக்கி, மேற்சொன்ன சாதனங்கள் கைகூடும் வரையில் சரீரப்பற்று விடுத்து இயம

நியமாதி யோகாங்கங்களை முறையே ஒன்றின்பின் ஒன்றாக அனுஷ்டித்து வரல்வேண்டும். இந்த விதங்களில் யாதொரு தவறு நேரிடினும் அச்சாதனங்களுக்கு இடையூறு நேர்ந்து யோகங்கள் கைகூடாது. அவ்விதத்தடைகளொன்றுமின்றி யவ்வச்சாதனங்களிற் முறையே தேறி யோகங்கள் கைகூடினும், இந்த அடயோக சித்திகளைக்கொண்டு மறுபடி பிறவாத மார்க்கமாகிய முத்திநெறியை யடையக்கூடாது. இந்த அடயோகசாதனங்களால் கண்டோர் பலரும் தம்மை பூசிக்கும் பெருமையைமாத்திரம் அடைவார்களானதால் அடயோக சித்திஅடைவது விநோத வித்தைக்குச் சமானமாகும்.

அடயோகத்தைக் குறித்து சுவாமி விவேகாநந்தர் அடியில், வருமாறு திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள்:—

அடயோகியின் முக்கிய உத்தேசமும், லக்ஷியமும் ஆரோக்கியமாம்; தமக்கு ரோகம் வரமாட்டாதென அவருக்கு நிச்சயமிருக்கின்றது; அது வருவதுமின்று; அவர் நீண்டகாலம் ஜீவித்திருக்கின்றனர்; ஒருநூறு வருஷமிருப்பது அவருக்குப் பெரிதல்ல. "நூற்றைம்பதாவது வயதில் அவர் ஒரு நவயௌவன சம்பன்னராகவிருப்பர்; ஒருரோமமும் நரைத்திருக்கமாட்டாது. ஆயினும், அவ்வளவே பயனும். ஒருகால் ஓர் ஆலமரம் 5000வரு ஜீவித்திருக்கின்றது. ஆயினும் அஃது ஓர் ஆலமரமாகவேயிருக்கின்றதன்றி அதனிடத்து விசேஷமொன்றுமின்றாம். ஆதலின், ஒரு மனிதன் நீண்டகாலம் ஜீவித்திருப்பானாயின், அவன் ஓர் ஆரோக்கியமுடைய ஜந்துவென்பது மாத்திரந்தானாம்." என்பதே.

அடுத்த சஞ்சிகையில் இராஜயோகத்தைப்பற்றி விஸ்தாரமாய் எழுதுவோம்.

(தொடரும்.)

## பகவத்கீதை.

இந்தப்பொருளானது இப்போது என்னால் அடையப்பட்டது. இந்தக் கோரிக்கையையடைவேன், இந்தப் பொருளானது எனக்கிருக்கின்றது இந்தப் பொருளுங்கூட எனக்குப் பின்னு



முண்டாகும், இந்தச்சத்துருவானவன் என்னாலே கொல்லப்பட்டான், மற்றச்சத்துருக்களையுங்கொல்லுவேன். நான் சாமர்த்தியமுடையவன், நான் போகத்தையனுபவிக்கிறவன்; நான் உத்தேசப்படி காரியங்களை நிறைவேற்றுவேன், பலமுள்ளவனும் சுகமுடையவனும் சம்பத்துடையவனும் உயர்குலத்தோனுமிருக்கிறேன், எனக்குசமானவன் வேறே எவனிருக்கிறான், யாகஞ் செய்யப்போகிறேன், தானஞ்செய்யப் போகிறேன். சந்தோஷமடையப்போகிறேன் என்று இவ்விதமாய் அஞ்ஞானத்தினாலே மோகமடைந்தும் மோகவலையினால் சூழப்பட்டும் பலவித சஞ்சலத்துடன் கூடியமனதினால் பிரமையடைந்தும் விஷய போகங்களிலே அதிக ஆசையுடையவர்களாயும் இருப்பவர்கள் அசுத்தமான நரகத்தில் விழுகிறார்கள்.

தற்புகழுடையவர்களாயும் வணக்கமற்றவர்களாயும் பொருளினாலுண்டான கர்வம் மதம் இவைகளுடன் கூடியவர்களாயும், அகங்காரம் பலம் இறுமாப்பு ஆசை கோபம் இவைகளை ஆசிரயித்தவர்களாயும், தம்முடையவும் பிறருடையவும் தேகத்திலே அந்தரியாமியாயிருக்கிற என்னைத்தூஷிக்கிறவர்களாயும் அவதூறு செய்கிறவர்களாயுமிருக்கிற அவர்கள் டம்பத்தினால் வேதவிதிப்படியல்லாத பெயருக்கு மாத்திரம் யக்ஞமென்கிற கிரியைகளைச் செய்கிறார்கள். துவேஷமுடையவர்களாயும் குரூரசுபாவமுள்ளவர்களாயும், அசுத்தமானவர்களாயும், மனிதரில் கடையோராயுமிருக்கிற அவர்களை ஜனன மரண மார்க்கங்களில் அசுரயோநிகளிலேயே எப்பவும் நான் ஜனிப்பிக்கிறேன்.

ஓ! குந்திபுத்திரா! ஆசை கோபம் உலோபம் என்ற மூன்று விதமான இவைகள் நரகத்திற்குவாசலாயும் தனக்கு கெடுதியைக் கொடுக்க ஏதுவாயுமிருக்கின்றன. ஆகையாலிந்த மூன்றையும் விட்டு விடவேண்டும்.

ஓ! குந்திபுத்திரா! நரகத்திற்கு காரணமான இந்தமூன்றுகளினாலே விடப்பட்ட மனிதன், தனக்கு நன்மையைச் செய்துகொள்ளுகிறான். அதினாலே மோக்ஷத்தையடைகிறான்.

## கம்பியில்லாத் தந்தி மூலமாய் சிகிச்சையுப்தேசித்தல்

மெக்ஸிகோ குடாவில் பிரயாணம்செய்துகொண்டிருந்த கப்பலில் அதன் மாலுமிக்குச் சில தினங்களுக்கு முன்பு, பதனழிந்த வஸ்துக்களிலிருந்துண்டாகும் ஒருவித விஷத்தின் சம்பந்தத்தினால் அபாயம் நேரிட்டது. அக்கப்பலில் வைத்தியர் ஒருவரும் இல்லாமையினால், தகுந்த சிகிச்சையன்றி அம்மாலுமி தனக்கு பிராணாபாயம் உண்டாய்விடுமென்று நினைத்து, கம்பியில்லாத் தந்திமூலமாய் சுமார் நூறு மைலுக்கு அப்பாலிருந்த மற்றொரு கப்பலிலுள்ள வைத்தியருக்குத் தனக்குநேரிட்டிருக்கும் அபாயகரமான நிலைமையை அறிவித்தான். இச்செய்தி நூறு மைலிலிருந்த கப்பலுக்கு எட்டியதோடு, 700 மைலுக்கப்பாலிருந்த யுத்தக்கப்பலிலுள்ள மாலுமியினாலும் தெரிந்து கொள்ளப்பட்டு, அக்கப்பலின் சர்ஜனுக்கு விளங்க அறிவிக்கப்பட்டது. உடனே அவ்வயித்தியர் கம்பியில்லாத் தந்திமூலமாய் சிகிச்சா முறையை விபரமாக, மிகவும் எளிதாக 700 மைலுக்கப்பாலிருந்த கப்பலின் மாலுமிக்குத் தெரியப்படுத்த, அம்மாலுமி தன் ஔஷதப்பெட்டியிலிருந்த மருந்துகளை 700 மைலுக்கப்பாலிலுள்ள வைத்தியரிடமிருந்து கிடைத்த கம்பியில்லாத் தந்தியின் செய்திகளின் படியே உபயோகித்ததில், பிராணாபாயமான நிலைமையிலிருந்து நிவிர்த்தியடைந்தான். Practical Medicine.

---

## குருடர் காதுகளால் பார்த்தல்.

பிரெஞ்சு தேசத்திய சாஸ்திரஞ்ஞரான, எம்போர்னியர் டால்பி (M. F. Dalbe) என்பவர் ஒரு அற்புதமான கருவியை கண்டுபிடித்திருக்கிறார். அதனால் குருடன் அச்சிட்ட புஸ்தகங்களையும் வர்த்தமானப் பத்திரிகைகளையும் பார்த்துப்படிக்கமுடியும். இது ஒரு சிறிய யந்திரம். டெலிபோன் கயிற்றில் இணைத்து காதில் வைத்துக் கேட்பதற்கான குழாயைப் போல் சிறிய நேரர் குழல் இச்சிறிய கருவியில் அமைக்கப்பட்டிருக்கிறது. படிப்பவனுடைய இஷ்டப்படியெல்லாம் இக்குழல் அச்சிட்ட காகிதத்தின் மேல் நாலாபக்கமும் எளிதில் அசையக்கூடியது. அக்குழாயின் மூலமாய் எழுத்துக்களை விபரமாய் குருடன்பார்த்துத்தெரிந்துகொள்ளுகிறான் இக்கருவியில் மின்சாரம் தொடர்ந்து ஊடுருவிப் பாய்ந்துகொண்டிருக்கும். மின்சாரப் பாய்ச்சலானது முக்கியமாய் சிலினியம் (Silenium) என்கிற உலோகத்தின் மூலமாகவே ஊடுருவ வேண்டியதிருப்பதால், அந்த உலோகம் படிப்பவனுடைய இஷ்டப்படி மின்சார வேகத்தைக் கதிக்கச் செய்யவும் குறையச் செய்யவும் சக்தியுடையதாயிருக்கிறது. ஆகவே சமயோசிதப்படி வெளிச்சத்தின் அளவும் தாரதம்மியப்படும். இக்கருவிக்கு சிலினியம் என்ற உலோகமே உயிர் நிலையாய் அமைந்துளது. இக்கருவியை உபயோகிப்பதற்கு பயிற்சி செய்வதிலும் அதிக கஷ்டமில்லை எனப்படுகிறது, இக்கருவிக்கு டைப்ரீடிங் ஆக்டோபோன் (Type Reading Octophone) என்று பெயர். Vaidya Kalanidhi.



---

## சுகாதாரம்.

(133-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நம்முடைய திரேகத்தின் அமைப்பு:- நம்முடைய திரேகத்தில் நூற்றுக்கு சுமார் அறுபது பங்கு ஜலமாகவிருக்கின்றது. மீதியில் இந்திரியசம்பந்த மற்ற (Inorganic) வஸ்துக்களாகிய இரும்பு முதலிய உலோகங்களடங்கிய உப்புக்களும், இந்திரிய சம்பந்தமுள்ள (Organic) கரி, உப்புவாயு முதலியவைகள் கலந்துள்ள வஸ்துக்களுமிருக்கின்றன. இந்திரிய சம்பந்தமுள்ளவைகளை உப்புவாயு சம்பந்தமுள்ளவைகளென்றும் உப்பு வாயு சம்பந்தமில்லாதவைகளென்றும் பிரிக்கலாம். சதை நரம்புகளில் உப்பு வாயு கலந்திருக்கின்றது. கொழுப்பு முதலியவைகளில் உப்பு வாயு கிடையாது. கொழுப்பானது உடம்பிலிருக்கும் ஒவ்வொரு அங்கங்களையும் உறைபோல் காப்பாற்றுவதோடு நமக்கு வேண்டிய உஷ்ணத்தையும்தருகின்றது.

நாம் ஏன் ஆகாரம் உட்கொள்ளவேண்டும்:— நம்முடைய இருதயம் என்னேரமும் அடித்துக்கொண்டேயிருக்கின்றது. நாம் எந்நேரமும் மூச்சு விட்டுக்கொண்டேயிருக்கிறோம். நம்முடைய வயிற்றில் எப்பொழுதும் ஆகாரம் ஜீரணமாக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது. நம்முடைய மூளையெப்பொழுதும் ஏதாவதொரு வேலை செய்துகொண்டேயிருக்கிறது. இவற்றைத்தவிற நம்மு

டைய கை கால் முதலிய அவயவங்களும் வேலை செய்கின்றன. இவ்விதமான பலவித வேலைகளைச் செய்வதற்கு சக்தியுண்டாகுவதற்காக நாம் சாப்பிடுகிறோம். மேலும் சிறு பிராயத்தில் தேகம் வளருவதற்காகவும், எக்காலத்திலும் வேலை செய்வதனால் தேய்ந்து அல்லது கெட்டுப்போய்க்கொண்டிருக்கும் அங்கங்களைப் புதுப்பிப்பதற்கும் ஆகாரம் தேவையாயிருக்கின்றது. சொற்ப வேலை செய்யும் மனிதன் ஒரு நாளைக்குக்கு நானூறு கிரேயின் கரியை சுவாச மூலமாய் கரியமில வாயுவினாலும், மூன்னூறு கிரேயின் உப்பு வாயுவை சிறுநீற்றின் வழியாகவும் இழக்கிறான். நாம் சாப்பிடும் ஆகாரமும் மேற்படி உபயோகங்களுக்குத் தகுதியானதாகவும் போதுமானதாகவுமிருக்கவேண்டும்.

**ஆகாரத்தின் வகைகள்.** நாம் உட்கொள்ளும் ஆகாரத்தை இந்திரிய சம்பந்தமானவையென்றும் (Organic) இந்திரிய சம்பந்தமற்றவை (Inorganic) என்றும் பிரிக்கலாம். இந்திரிய சம்பந்தமுள்ளவைகளில் சதையை வளர்க்கக்கூடிய உப்பு வாயு சம்பந்தமான வஸ்துக்களென்றும், கரி சம்பந்தமான சர்க்கரை, கொழுப்பு, எண்ணெய் முதலிய வஸ்துக்களென்றும், இருவகை வஸ்துக்களடங்கியிருக்கின்றன. இந்திரிய சம்பந்தமற்றவைகள் ஜலமும் உப்புக்களுமாம். இவைகளைத் தவிர ஆகாரங்களுக்கு உதவியாக வாசனைத்திரவியங்கள், மசாலை வகைகள், டீ காபி முதலிய பானங்களும் உட்கொள்ளப்படுகின்றன. மேற்சொல்லிய வஸ்துக்களை ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

**ஜலம்.** ஜலமானது நாம் சாப்பிடும் ஆகாரத்தின் மூலமாகவும் நாம் குடிக்கும் பானங்கள் மூலமாகவும் உட்கொள்ளப்படுகிறது. மொத்தத்தில் நாம் உட்கொள்ளும் வஸ்துக்களில் ஐந்தில் நான்கு பங்கு ஜலமேயாகும். பாலில் நூற்றில் சுமார் எண்பத்தெட்டுப்பங்கு ஜலமிருக்கிறது. வேக வைத்த ஆகார வகைகளில் பாதிக்கு மேலும் மாமிசத்தில் முக்கால்பங்கும் ஜலமிருக்கின்றது. இவ்விதமாக நாம் உட்கொள்ளும் ஒவ்வொரு ஆகாரத்திலும் ஜலமிருப்பதனால்தான் அவைகள் இலேசாய் ஜீரணமாக்கப்படுகின்றன.



**உப்புவகைகள்.** இவைகள் எல்லா உணவுப் பொருள்களிலும் கலந்திருக்கின்றன. இப்பொருள்களை எரிப்பதனால்கிடைக்கும் சாம்பலில்தான் மேற்படி உப்புவகைகளிருக்கின்றன. அரிசியிலதான் உப்புவகைகள் குறைவாயிருக்கின்றன. உடம்பில் உப்புவகைகள் நரம்புகளிலும் எலும்புகளிலும் இருக்கின்றன. சிறு குழந்தைகளுக்குப்போதுமான அளவு உப்புவகைகள், அவர்களின் ஆகாரத்தில் கிடைக்காவிட்டால் அவர்களுக்கு கணை நோய் (Ricket) என்னும் ஒரு வியாதி வருகின்றது. அதனால் அவர்களின் எலும்புகள் சக்தியற்றவைகளாயும் வளைந்தும் போகின்றன. சுண்ணாம்பு சம்பந்தமான கால்சியம் பாஸ்பேட் (Calcium Phospate) என்னும் உப்புத்தான் எலும்புகளின் வளர்ச்சிக்கு முக்கியமாய் வேண்டியது. சாதாரணமாய் நாம் உபயோகிக்கும் உப்பும் நமக்கு அவசியமாய் வேண்டியதே. மற்றவித உப்புக்கள் பலவித காய், கனி, கீரை வகைகளில் இருக்கின்றன. ஆகையால் நாம் காய்கறி, கீரை வகைகளை தாராளமாய் உட்கொள்ள வேண்டும்.

**சதையை வளர்க்கும் வஸ்துக்கள்.** இந்த வஸ்துக்கள்தான் நம் ஆகாரத்தில் அதிகமாக விருக்கவேண்டும். ஆனாலும் நாம் சாதாரணமாய் உட்கொள்ளும் உணவில் இவை போதுமானவளவு இருப்பதில்லை. மாமிசத்திலும் பயறு வகைகள் அதாவது காய் தானியங்களிலும் இவை மிகுதியாய்க் காணப்படுகின்றன. மேற்கூறியவைகள் நமக்கு வளர்ச்சியைக் கொடுப்பதுடன் நமக்கு வேண்டிய உஷ்ணத்தையும் தருகின்றன.

இவ்வஸ்துக்களில்தான் உப்பு வாயு கலந்திருக்கின்றது. உப்புவாயுவானது உயிருள்ள எந்த ஜந்துவுக்கும் அவசியமாய் வேண்டியது. உப்புவாயு கலந்திராத வஸ்துவுக்கு உயிரும் கிடையாது. ஆகையால் நமக்கும் உப்புவாயு அதிகமாக வேண்டும். ஆகாயத்தில் ஏராளமாக உப்புவாயு இருந்த போதிலும் நாம் சுவாசிக்கும் உப்புவாயுவானது நம்முடம்பில் சேராமல் வெளியே மறுபடியும் வந்து விடுகின்றது. ஆகையால்தான் நாம் நம்முடைய உணவு மூலமாய் உப்புவாயு சம்பந்தமுள்ள வஸ்துக்

களைச் சாப்பிடவேண்டும். மரஞ்செடிகள் பூமியிலிருந்து உப்புவாயுவைக் கிரகிக்கின்றன. காய்தானியச்செடி கொடிகளுக்கு ஆகாயத்திலிருந்து உப்புவாயுவைக் கிரகிக்கும் சக்தியிருக்கின்றது. மேற்கூறியபடி நமக்கு உப்புவாயுவின் அவசியத்தைக் கவனித்து மாமிசம் அல்லது காய் தானியவகைகள் மிகுதியாய் உட்கொள்ள வேண்டும்.

கஞ்சிப்பசை சம்பந்தமான வஸ்துக்கள். (Starch) இந்த வஸ்துக்களில் கரியும், பிராணவாயுவும் ஜலவாயுவுமே யிருக்கின்றன. ஆகையால் இவை நமக்குவேண்டிய உஷ்ணத்தைமட்டும் கொடுக்குமே யொழிய தேகத்திற்கு வளர்ச்சியைக் கொடுக்க மாட்டாது. தானியவகைகள் எல்லாவற்றிலும் பெரும் பான்மை இந்தவஸ்துவே யிருக்கின்றன. சவ்வரிசியில் முழுவதும் கஞ்சிப்பசையே (Starch) யிருக்கின்றது. மேற்கூறிய வஸ்துக்கள் இலேசாய் ஜீரணமாவதற்காக வேகவைக்கப்படவேண்டும், சர்க்கரைக்கும் கஞ்சிப்பசைக்குள்ள குணங்களே யிருக்கின்றது. ஆனாலும் சர்க்கரையானது இலேசாய்ஜீரணமாகும்.

எண்ணெய் முதலியவை. இவைகளும் தேகத்திற்கு உஷ்ணம்கொடுப்பதற்காகவே உபயோகப்படுகிறன. ஆனாலும் மேற்கூறிய வஸ்துக்களைவிட இரண்டரைப்பங்கு உஷ்ணம் கொடுக்கக் கூடியசக்தி இவைகளுக்கிருக்கின்றது. நாம் உட்கொள்ளும் உணவுப்பொருட்களில் கொஞ்சம் எண்ணெய் இருக்கின்றது ஆனாலும் மேற்கொண்டு கொஞ்சம் எண்ணெய் நெய் முதலியவை சேர்த்துக்கொள்ளுவது உத்தமம்.

மசால்பதார்த்தங்கள். இவைகள் நம்முடம்பிற்கு இன்றியமையாதவைகளாயில்லாத போதிலும் உணவு இலேசாய் ஜீரணமாவதற்கும் உணவிற்கு நல்ல ருசி மணம் முதலியவைகளை உண்டுபண்ணுவதற்கும் உதவியாயிருக்கின்றன. சில சமயங்களில் வியாதிகள் வராவிடாதபடியும் தடுக்கின்றன, இவைகள் கடுகு, மிளகு, சீரகம், கருவேப்பிலை, புளி, மிளகாய், முதலியவைகளேயாம். இவ்வஸ்துக்களை கொஞ்சமே உபயோகப் படுத்த வேண்டுமே யொழிய மிகமிஞ்சி உபயோகப் படுத்தலாகாது.

(தொடரும்.)

**S. Ramaswamy.**



## ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் திருவாய்மொழி.

வினா:— பகவானைநோக்கி உறத்தகுரலிற் ப்ரார்த்திக்கவேண்டுமா?

விடை:— நீ எவ்விதமாவது உன் இஷ்டப்படி ப்ரார்த்திக்கலாம் எறும்புகளின் காலடி சப்தத்தைக்கூடக் கேட்கும்பகவானுக்கு உன் ப்ரார்த்தனைச் சப்தம் கேட்காமற் போகுமா.

எதுவரையில் ஒருவன் அல்லாஹு! அல்லாஹு! (ஈஸ்வரா, ஈஸ்வரா,) என்று உறத்துக் கத்துகிறானோ. அதுவரையில் அவனுக்குஅல்லா (கடவுள்) ப்ரத்தியக்ஷமாகவில்லை யென்று நினைத்துக்கொள் ஏனெனில், பகவத் ஸாந்நியத்தைப்பெற்றவன் அமைதியடைந்து ஸாந்தமூர்த்தியாய் விளங்குவனன்றோ.

வினா:—பகவான் எங்கே வீற்றிருக்கிறார் அவரைத்தரிசிப்பது எப்படி?

விடை:—ஆழ்ந்தகடலிலுள்ள முத்தைப் பெறவேண்டுமாயின் மிகவும் சிரமப்பட்டு உயிரைக்கூடப் பொருட்படுத்தாது முழுகவேண்டுவது போல், ஸச்சிதானந்த ஸ்வரூபியைத்தரிசிக்க வேணடுமானல் விசேஷ பிரயாசைப்பட்டு இடைவிடாத யோகாப்யாஸம் முதலிய ஸாதனங்களைச் செய்யவேண்டும்.

கடலில் ஒருதடவை முழுகி முத்துக்கள் அகப்படாவிட்டால் கடலில் முத்துக்களே கிடையாதென்று கூறிவிடாமல் விடாமுயற்சியுடன் பலதடவை முழுகும் பக்ஷத்தில் எவ்வாறு கடைசியில் கார்யசித்தியாகுமோ அவ்வாறே ப்ரஹ்மஞானத்திலும் முதலில் இடையூறுகள் நேரிடினும் வெறுப்படையாமல் ஊக்கமாய் முயலும் பக்ஷத்தில் முடிவில் ஈசனருளைப் பெறுவது நிச்சயம்.

வினா:—எம்பெருமானை யாம் எவ்வாறு தரிசிக்கலாம்?

விடை:—ஒரு பெரியஅழகிய ரோஹிதமத்ஸ்யத்தைப்பிடிக்க விரும்பியசெம்படவன் தூண்டிலில் ஒருமாம்ஸத்துண்டைக் கட்டி அதை நீரில்எறிந்து அவ் இரையை மீன் விழுங்கும் வரையில் பொறுமையாய்ப்பார்த்துக்கொண்டு நாழிகைக் கணக்காய்க் காத்திருப்பது போல் ஸாதனங்களை யெல்லாம் பொறுமையாய் ஆசரிக்கும் பக்தனும் கடைசியில் எம்பெருமானது காட்சியைப்பெறுகின்றான்.

### பகவானை தெரிசிக்கும் விதம்.

வினா:—பகவான் ஸர்வவியாபியாயின் அவரை நாம் ஏன் காண்பதில்லை.

விடை:—நீர்ப்பாசிபரவிய பொய்கையின் கரைப்பக்கமாய் நின்று பார்த்தால் அதில் ஜலம் இருப்பதாகவே தெரியாது அது போல் உன்கண்கள் மாயையால் மூடப்பட்டிருப்பதால் கடவுள் காணப்படவில்லையென்று முறையிடுகிறாய் எம்பெருமானைக்காண வேண்டுமாயின் உன் கண்ணிலுள்ள மாயா படலத்தை நீக்க வேண்டும்.

ஆதித்தியனை மேகம் மறைப்பது போல் ப்ரஹ்மத்தை மாயை மூடியிருக்கின்றது. மேகம் அகலும் பொழுது ஆதித்தியதரிசனம் உண்டாகின்றது போல் மாயை தொலையும் பொழுது ப்ரஹ்மமும் ப்ரகாசிக்கின்றது.

நாணலும் நுரையும் மூடிய பொய்கையில் விளையாடும் மீன்களை வெளியிலிருந்து பார்க்க முடியாதது போல் மாயையெனும் திரையால் மூடப் பெற்று மனிதர்பார்வைக்குத் தென்படாமல் ஜீவர்களது ஹிருதயங்களில் அதிருசியராய்த் திருவிளையாடல் புரிகின்றார் தேவதேவன்.

ஆசையின் வாசனை சிறிதேனும் உள்ளவரைக்கும் கடவுளைக் காணமுடியாது. ஆகையால் உன் அற்ப ஆசைகளைத் திருப்திசெய்வதாலும் பேராசைகளை விவேக விசாரணைகளாலும் ஒழித்துவிடு.

நூலின் நுனியில் ஒரு சிற்றிழைபிரிந்துநின்றாலும் அந்நூல் ஊசியின் காதில் நுழையாததுபோல் அவாவின் அடையாளம் சிறிதிருந்தாலும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடையமுடியாது.

ஒரு மஹா ராஜாவைத் தரிசிக்க விரும்புகின்றவன் த்வாரபாலகர் ஸிம்ஹாஸன ரக்ஷகர் முதலிய ஆஸ்தான உத்தியோகஸ்தர்களுடைய தயவை ஸம்பாதிக்கவேண்டியது அவசியமாவதுபோல் பகவானைத்தரிசிக்க விரும்பும் பத்தனும் பக்தியோகம் முதலிய பலவகை ஸாதனங்களை யனுஷ்டிப்பதன்றி அநேக பக்தர்களுக்குத் தொண்டுபுரிந்து ஞானிகளுடன் ஸஹவாஸமும் செய்யவேண்டும்.

கஞ்சா அல்லது பங்கி என்னும் சொல்லை யுச்சரித்த மாத்திரத்தினாலேயே மனிதனுக்கு மயக்கம் உண்டாகிவிடாது மயக்கம்உண்டாகவேண்டுமானால் கஞ்சாவைக் கொண்டுவந்து அரைத்து நீரிற்கலந்து குடிக்கவேண்டும் "ஈசுவரா! ஈசுவரா! என்று வாளாஉறக்கக் கத்துவதிற் பயனில்லை பக்தியோகத்தைக் கிரமமாய் அநுஷ்டிக்கும்பக்ஷத்தில் பகவத்ஸந்தர்ஸனம் உண்டாவது திண்ணம்.

## பகவந்நாமம்.

பக்தவத்ஸலனாகிய பரந்தாமனுடைய நாமத்தையிடைவிடாமல் உச்சரிப்பதாகிய பக்தியோகமே இக்கலியுகத்திற்கேற்ற சிறந்த முக்திசாதனமாகும்.

தேவதேவனைத்தரிசிக்க வேண்டுமாயின் ஹரிநாமபஜனையில் பூர்ணவிஸ்வாஸமும் நித்தியவஸ்துவிவேகமும் அவசியம் இருத்தல் வேண்டும்.

அறிந்தோ, அறியாமலோ, எவ்விதத்திலாவது அமிர்த ஸரஸ்ஸில் (அமுதப் பொய்கையில்) விழுந்தமனிதன் இறவாமையடைவது போல் பகவந்நாமத்தைப்பிரயத்தினமூலமாகவோ பிரயத்தினமின்றியோ எவ்விதத்திலாவது உச்சரிப்பவனுக்கு இராத்திரியில் அமிர்த வடிவமாகிய முத்தி கைகூடுவது நிச்சயம்.



ஒளியளித்தல் விளக்கின் இயல்பு அதன் உதவியைக்கொண்டு சிலர் அன்னம் ஆக்கலாம் சிலர் பொய்ப்பத்திரம் ஸ்ருஷ்டனைசெய்யலாம் மற்றுஞ்சிலர் பாகவத பாராயணமுஞ்செய்யலாம் அதுபோலவே பகவந்நாமத்தின் ஸஹாயத்தால் சிலர் மோக்ஷம் அடைவதற்கும் சிலர் தங்களுடைய தீயவெண்ணங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கும் முயல்கின்றனராயினும் எம்பெருமானது திருநாமம் மாத்திரம் அவற்றால் பாதிக்கப்படாமல் என்றும் நிஷ்களங்கமாய் விளங்குகின்றது.

புத்தி பூர்வகமாயோ, புத்தியின்றியோ, பிரயத்தின சகிதமாகவோ, பிரயத்தினமின்றியோ, நாம் பகவந் நாமத்தை எந்நிலையில் உச்சரித்தபோதிலும், அந்நாமோச்சாரணத்தின் பலன் நமக்குத்தவறாமல் கிடைக்கும். சுயபுத்தியால் ஆற்றுக்கேகி ஸ்நாநம் செய்பவனும், மற்றொருவனால் நீரில் பிடித்துத் தள்ளப்பெற்று ஸ்நானம் செய்பவனும் தூங்குங்காலையில் தன்மேல் ஜலம் ஊற்றப்பெறுகிறவனும் நதிஸ்நாந பலத்தை சமானமாய் அடைகிறார்கள்.

## கடவுளைக்கண்டவர்கள்.

கடவுளைக் கண்டவனே உண்மையான ஞானியாவான். அவன் நிலை குழந்தையின் நிலையைப் போன்றது. குழந்தைக்கும் ஒருவித அஹங்காரம் இருப்பதாகத் தோன்றினும் அது வெறுந்தோற்றமேயன்றி தேற்றமான அகந்தையன்று. வளர்ந்தமனிதனது அஹங்காரத்தை நோக்கப் பால் மணம் மாறாப்பசிய குழந்தையின் அஹங்காரம் சூனியமேயாகும்.

குழந்தையின் அஹங்காரத்தைக் கண்ணாடியிற்றோன்றும் முகத்துக் கொப்பிடலாம். கண்ணாடியிலுள்ள முகமானது உண்மையான முகத்தைப் போலவே தோற்றினும் அதனால் ஒருவருக்கும் யாதொரு தீங்கும் விளைவதில்லை.

வினா:—எல்லோரும் கடவுளைக் காண்பார்களா?

விடை:—எவனும் சுத்த உபவாஸம் இருப்பதில்லை சிலர் காலை 9மணிக்கும் சிலர் பகலுக்கும், மற்றுஞ்சிலர் மாலை சூரியாஸ்தவனமான பிறகும் போஜனம் செய்வார்கள் அதுபோலவே இப்பிறவியிலாகிலும் அல்லது பல பிறவிகள் கழித்தாகிலும் யெப்பொழுதாவது ஒருகால் எல்லோரும் கடவுளைக்காண்பார்கள்.

## கடவுள் தாமே ப்ரத்தியக்ஷமாகிறார்.

காவலாளன் தன் கையிலுள்ள கருநிறமான லாந்தரைக்கொண்டு அதன் கதிர்களை எவரெவர் மீது வீசச்செய்கிறானோ அவர்களையெல்லாம் பார்க்கிறான். ஆனால் அவன் அந்த லாந்தரைத் தன் பக்கமாய்த் திருப்பாதிருக்கும்வரையில் அவனை மற்றொருவரும் பார்க்கமுடியாது. அதுபோலவே

கடவுள் எல்லோரையும் பார்த்துக்கொண்டிருந்தும் அவரே கண்ணுக்கு நேர்ந்து பிரத்யக்ஷமாகிறவரையில் அவரை ஒருவராலும் பார்க்கமுடியாது.

வினா:—ஜகதம்பிகையை நாம் ஏன் காண்க முடியாது?

விடை:—அவ்வம்மை, உயர்குலத்திலுதித்த உத்தமி போல அந்தப்புரத்தில் திரைக்குள்ளிருந்தே தான் எல்லோரையும் பார்த்துக் கொண்டிருந்தும் தன்னை மாத்திரம் ஒருவரும் பார்க்க வொட்டாமல் எல்லாக் காரியங்களையும் நடத்திவருகிறாள். அவளது அன்பிற்குரிய பக்தர்கள் மாத்திரம் மாயையெனும் திரையைத்தள்ளிக்கொண்டு அவளது ஸந்நிதானஞ்சென்று அவளைத் தரிசிக்கின்றார்கள்.

ஓர் அன்னைக்கு அநேக குழந்தைகள் உள. அவள் ஒரு குழந்தைக்குப் பவளசாமும், மற்றொன்றுக்குப் பொம்மையும் இன்னொரு குழந்தைக்குச் சில தின்பண்டங்களும் கொடுக்க அக்குழந்தைகள் அவற்றைப் பெற்றுக் கொண்டு மகிழ்ந்து தங்கள் தாயாரையே மறந்துவிட்டிருக்கின்ற சமயத்தில் அவள் தன் வீட்டுவேலைகளைப் பார்த்துக்கொள்ளுகிறாள்.

ஆனால் அக்குழந்தைகளுக்குள் எதுவாயினும் ஒன்று தன் விளையாட்டு சாமான்களை யெறிந்துவிட்டு அம்மா! அம்மா! என்று கத்துமாகில் அவள் உடனே அதனிடம் ஓடி அதைத்தன் கையாற் கட்டியணைத்து முத்தமிடுகிறாள். அவ்வாறே ஏ! மனிதனே, நீயும் உலக வின்பங்களைக்கண்டு மயங்கி உனைப்பெற்றெடுத்த லோகமாதாவை மறந்து விட்டனை. ஆனால் நீ அவற்றைத் தூரத் தள்ளிவிட்டு அவளைநோக்கி ஓலமிடுவாயாகில் அவள் உடனே ஓடிவந்து உன்னை வாரியணைத்தாட்கொள்வாள்.

மனமே உள்ளன்புடன் உலக மாதாவைக் கூவியழை. அப்பொழுது அவள் ப்ரேமையுடன் விரைவாய் உன்னையாட்கொள்ள ஓடிவரும் விதத்தைப் பார்க்கலாம் அன்பர்கள் உள்ளங் கசிந்துருகிக் கடவுளைக் கூவியழைக்கும்பொழுது அவர் நொடிப்பொழுதுகூட மனங் கனியாமலிரார்.

கடவுள் அதி அற்பமான காணிக்கையையும் திருஉள்ளம் பற்றுகிறார்:

நல்ல பூஸ்திதியுள்ள கனவான் எவ்வளவு செல்வவானாயிருப்பினும் தன் கீழ்வேலை செய்து பிழைக்கும் குடியானவர் அன்பாய்க் கொண்டு வந்தளிக்கும் அற்ப காணிக்கையையும் அங்கீகரித்து சந்தோஷிப்பதுபோல் கடவுள் எவ்வளவு மகிமையும் மேன்மையும் பொருந்தியவராயிருப்பினும் தமது அடியார்கள் அன்புடன் மனப்பூர்வமாய் அர்ப்பிக்கும் அற்ப வஸ்துவையும் பெரிதாய்க் கருதி ஆனந்திக்கின்றார்.

குளங்கள் முதலிய நீர்நிலைகளில் மீன்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தபோதிலும் ருசியும் மணமும் பொருந்திய மனோகரமாயுள்ள மாம்ஸத்துண்டு கட்டிய தூண்டிலை நீரில் எறிந்தவுடனே அவையாவும் எல்லாப் பக்கங்களி



210789

னின்றும் அவ்விடத்தை நோக்கி வேகமாய் தள்ளிவருவதுபோல் பக்தியும் ப்ரேமையும் நிறைந்து ததும்பும் ஹ்ருதயமுள்ள பக்தர்களுக்குப் பகவான் சீக்கிரத்திற் ப்ரத்யக்ஷமாகிறார். சுபம்

(தொடரும்.)

தூ. ச. முத்து நாடன்.
அருப்புக்கோட்டை.

---

## "அறம்"

அன்பும் ஆற்றலும் மிக்க ஐயா, க்ஷத்திரிய குலத்தில், பாண்டிய வம்சத்தில் அவதரித்த நாடார்குல கனவான்களே! நாம் பார்வையிடும் "ஞானோதயம்" என்றபத்திரிகையே மேற்காட்டிய தலையங்கத்தை அதாவது "அறம்" என்பதை செய்து வருகிறது.

எப்படி யென்றால் நம் குலசிகாமணிகள் யாவரும் முன்னேற்றமடையவேண்டிய விஷயங்களை "ஞானோதயம்" வாயிலாக நாம் அறிந்து அதன் மூலமாய் நாம்பெற்றிழந்த நாகரீகத்தையும், கல்வியையும், ஞானத்தையும் செல்வத்தையும் திரும்பவும் பெற நம் இருளகற்றவந்த சூரிய உதயத்தைப் போன்ற ஞானோதயத்தை நாம் கண்டு தெரிசிக்கச் செய்த கடவுளுக்கு என்றும் மனப்பூர்வமாக ஸ்தோத்திரம் செலுத்துவோமாக.

இவ்வளவு தருமத்தையளித்த மகா—ா—ஸ்ரீ சிவ. பெ. ராமலிங்க நாடாரவர்களை நாம் உள்ளன்புடன் வாழ்த்துவோமாக.

யான் என் புல்லறிவிற்குத் தகுந்தபடி எடுத்துப் பேசும் அறம் என்ற விஷயத்தில் குற்றம் குறை இருப்பின் குற்றத்தை நீக்கி, குணத்தைக் கொண்டாட இதை வாசிக்கும் நேயர்களெல்லோரையும் வணக்கமாய் கேட்கின்றேன்.

அறம் என்றால் தருமம் என்று அர்த்தம். மற்றவர் செல்வத்தில் ஆசை வையாமலும், அவைகாரணமாய் உண்டாகும் கோபம், அதன்மூலமாய் உண்டாகும் கடுமையானசொற்கள், இவைகளைத்தடுத்து நல்லொழுக்கத்தினின்று தவறாதிருப்பதும்; நம்திரவியத்தின் மூலமாயும், வாக்குசகாயத்தின் மூலமாயும, நம்தேகத்தின் மூலமாயும் பிறருக்கு யாதாமொரு உதவி செய்தலும் தருமம் எனப்படும்.

அறம் என்பது இல்லறம் என்றும், துறவற மென்றும் இருவகைப்படும். இல்லறம் என்றால் ஓர் பெண்நாயகமும் அவ்வுத்தமிக்குரிய ஓர் புருஷநாயகமும் சேர்ந்து இல்வாழ்க்கையை முன்னோர்கள் கூறியிருக்கிற இல்லற தருமப்படி நெறிதவறாமல் நடத்துவதே. துறவறமென்றால் "மாயை மாயை எல்லாம் மாயை" என்று ஓர் ஞானி சொன்னதுபோற் உலகத்தின்கண் உள்ள, பெண், பொன் மேலுள்ள அவாவை ஒழித்து

சரியை கிரியை யோகம் ஞானம் இவைகளால் பேரானந்தத்தை நாடி முத்திசேர்வதே.

ஆனால் துறவறம் தேடுதல் எல்லோராலும் இயலாதகாரியம். இதனை எண்ணித்தான் நமதருமைத் தாயாகிய ஔவை பிராட்டியாரும் "இல்லறமல்லது நல்லறமன்று" என்று கூறியுள்ளார்.

ஆகையால் நாம் இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் பொதுவாயுள்ள தருமம் என்ன என்பதை சிறிது கவனிப்போம்.

நமது முன்னோர்களாலும், நம்முன்னோர்கள் காலத்திலும் தருமம் என்பது 32 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடைபெற்றிருந்திருக்கிறது என்பது நம்மெல்லோருக்கும் தெரிந்தவிஷயம். அவற்றுள் முக்கியமானவை பொருளுதவி.

நமது முன்னோர்களால் நடாத்தப்பட்டுவந்த தருமவகைகளில் சில தற்போதும் நடைபெறுகிறது. தர்மம் எப்படிச் செய்யவேண்டும் என்பதையும், யாருக்குச் செய்யப்படவேண்டும் என்பதையும், தருமம் செய்வதினால் உண்டாகும் பிரயோஜனம் என்ன என்பதையும் பற்றி சிறிதுகவனிப்போம்.

1. **தர்மம் எப்படிச் செய்யவேண்டும்.**—"நீ தருமம் செய்யும் போது நீ செய்யும் தருமம் மற்றவர்களால் புகழப்படாதபடியும்; அந்தரங்கத்தில் இருக்கிற உன் சிருஷ்டிகருக்குமட்டும் தெரியும் படியாயும், உன்வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கும் படியாகவும் செய்" என்று ஓர் பக்தன் சொன்னதுபோல் நாம் நம்முடைய தர்மத்தைச் செய்வோமாக நாம் செய்யும் தருமம் தன்னைப் புகழவேண்டும் என்னும் டாம்பீகார்த்தமாய் செய்யப்படாமல் ஜீவகாருண்யத் தோடு செய்யப்பட வேண்டும்.

2. **தருமம் யாருக்குச் செய்யப்படவேண்டும்:**—நாம் செய்யும் தருமம் திரும்பி நாம் எதிர்பாராத தருமமாயிருக்கவேண்டும். யாதொரு பிரயோஜனத்தையாவது உத்தேசித்து நாம் தருமம் செய்கிறவர்களாக எண்ணப்படாதிருப்போமாக. இதுவே நீதிநூல்களில் சிறந்து வழங்கப்படுகிறது. இல்லாதார்க்கொன்றைக் கொடுப்பதே உத்தமமான தருமம் எனப்படும். இதுவே சிறந்த தருமமாம். யார் அன்னியருடைய உதவியை ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்களோ, அப்போது அவர்களுக்குச்செய்யப்படும் தருமமே சிறந்ததாம்.

திருப்தியாகச் சாப்பிட்டுவந்திருக்கும் ஒருவனுக்கு திரும்பவும் உபசாரஞ்செய்து, இனிய தின்பண்டங்களையும் பானங்களையும் கொடுத்து உதவுவதைபார்க்கிலும், பசியால் மெலிந்து களைத்துவந்த ஒருவனுக்கு அன்னங்கொடுத்துதவுவது மேலான தருமமாகும்.



விசேஷமாய் சம்பாத்தியம் செய்ய இயலாதவர்களுக்கே தருமம் கொடுப்பது உசிதம் என்று நீதிநூற்கள் உரைக்கின்றன.

3 **தருமம் செய்வதினாலுண்டாகும் பிரயோஜனம்:**— "நீ உன்னிடத்தில் அன்பாயிருக்கிறது போல் பிறனிடத்திலும் அன்பாயிருப்பாயாக" என்று நீதிநூற்கள் கூறும் வண்ணம், நாம் பிறருக்கு வரும் துன்பங்களை நமக்கு உண்டானது போற் பாவித்து உதவிசெய்தால் 'தருமம் தலைகாக்கும்' என்ற முதுமொழியின் பிரகாரம் இம் மண்ணுலகத்தில் இன்பங்களையும் விண்ணுலகத்தில் அழியாத பேரின்பவாழ்வையும் பெற்று வாழ்வோம்.

பிறஜீவன்களுக்குத் துன்பங்கள் உண்டாகும் பொழுதே அத் துன்பத்திலிருந்து விடுதலைசெய்வோமானால் புண்ணியம் உண்டு என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனிக் கொப்பாகும்'!

அறம் மோக்ஷத்தையும் அழியாத பேரின்பத்தையும் கொடுக்கும், ஆகையால் மனிதஉயிர் எடுத்த ஒவ்வொருவரும் தருமம் செய்யவேண்டும். தருமத்தைப் பார்க்கிலும் மனிதவர்க்கத்தினருக்கு வாழ்வைக் கொடுக்கக் கூடியது வேறொன்றுமில்லை என்பதை இதனால் உணரலாம். இதனாலேயே ஔவைபிராட்டியாரும் "அறஞ்செயவிரும்பு" என்னும் நீதிவாக்கியத்தை தாம் அருளிச்செய்த ஆத்திசூடிபுராணத்தில் முதலாவது கூறியுள்ளார்.

இதைவாசிக்கும் என் குலசிகாமணிகளே "கண்ணிலான் பெற்றிழந்தான்" என்றபடி நாம் பெற்று அனுபவித்த கல்வி, நாகரீகம், ஞானம், செல்வம் ஆகிய இவைகளை இழந்து போனோம். நாம் திரும்பவும் பெற்று, அனுபவிக்க வேண்டுமேயாயின் நாம் நம்முடைய தருமத்தை நிலைநிறுத்த வேண்டும். "தன்னுடைய கண்களில் இருக்கப்பட்ட உத்திரத்தை எடுக்காமல் பிறர் கண்ணிலிருக்கப்பட்ட துரும்பை எடுக்கப் பிரயாசப்படுவது" என்ன என்று ஓர் பக்தன் சொன்னது போல் நாம் நம்மையே சீர்திருத்திக்கொண்டு அப்பால் பிறரை நோக்குவோமாக.

நம்மவர்கள் முன்னேற வேண்டிய விஷயமாய் நம்மவர்கள் வாசஞ்செய்யும் ஒவ்வோர் இடங்களிலும் தருமமாக பணங்கள் செலவிட்டு பாடசாலை திறந்து கட்டாயப் படிப்பை ஏற்படுத்துவோமாக. இதுவே நம்மவர்கள் முன்னேறவேண்டிய சிறந்தவழி. இதைப்பாதையை திறந்துவிட பொருளுதவியாகிய தருமத்தைச்செய்து, முன்னேற்ற மடைவோமாக. இவ்விதம் போன்ற தருமச்செய்கையை செய்யவும் ஈசன் அருள்புரிவாராக. சுபம்! சுபம்!!

**கல்லூரணி, க்ஷத்திரிய மித்திரன்.**

## ஓர் வேண்டுகோள்

நாடார்குல கனவான்களே!

நமதருமை ஞானோதயம் ஆனிமாதத்திய சஞ்சிகை 3-வது புத்தகம் 91வது பக்கத்தில் பிரையாறு ஸ்ரீமான் பொன்னுசாமி நாடாரவர்களின் தர்மபத்தினியாரிடம் ஓர் சாதுவந்து தான் 12 வருடமட்டும் ஒரே யோகஞ்செய்வதற்காக இடம் கேட்டதாயும் அந்தம்மாள் பக்திமேலீட்டால் அவ்வண்ணமே காவலுடன் ஓர் பங்களா ஒழித்துக்கொடுத்து, ஷை சாது தன் சாதனைக்கு இடையூறின்றி அசையாது மெத்தையில் படுத்திருப்பதாயறிந்து பேரானந்தமடைந்ததுந்தவிர க்ஷத்திரியகுல ஸ்திரீயின் குணத்துக்கிணங்கி துறவியைப் பேணும் கொள்கையைக் கடைப்பிடித்தொழுகிய அம்மையாரின் பெருந்தகையான நற்குணத்தை மெச்சிக்கரையிலாக்களிமகிழ்வெய்தினன். நிற்க கடம்பூருக்கு மேற்கிலிருக்கிற அகிலாண்டபுரத்தில் நம்குலத்தில் ஓர் சாதுதோன்றி பக்தசிரோன்மணிகளால் தரப்பெற்ற பொருளைக்கொண்டு அவ்வூருக்கு கீள்பாரிசத்தில் நந்தவனம், கிணறு, முதலியதுடன், மடாலயமுமியற்றியிருப்பது அநேக கனவான்களுக்குத் தெரிந்திருக்கலாமென நினைக்கின்றேன். ஷை சாதுவின் விஷயமாயும் மடாலயத்திலும் அவ்வூரிலுள்ள நம்குலகனவான்களிற் சிலர் சிற்சில தீச்செயல்கள் புரிந்திருப்பதை யறிந்து ஆற்றொணாத் துயரடைகின்றேன். இத்தகைய தீச்செயல்கள் அறிவுடையபெரியோர் செய்கையன்று சிற்றறிவுடைய சிறியோர் சிலரால் செய்யப்பட்டிருக்குமென யூகிப்பதற்கிடமாகின்றன. ஆயினும் யிதுவிஷயத்தில் சிவநேசச்செல்வர்களாகிய பக்தசிரோன்மணிகள் யாவரும் விசேஷமாய் கடம்பூர் நாடார் கல்விச்சங்கத் தலைவர்களாகிய கனவான்களும் கவனித்து அத்தகையதீச்செயல்கள் இனிமேல் நடக்காவண்ணம் சீர்திருத்தி ஷை சாதுவைப் பாதுகாத்து உதவிபுரியுமாறு வேண்டுகின்றேன். நம்குலத்துதித்த சாதுவானபடியால் பக்தர்கள் யாவரும் முன்வந்து கவனித்து உதவிபுரியும்படி சர்வஜீவதயாபரனாகிய பரப்பிரமம் அருள்புரிவாராக.

**கொழும்பு, அடியார்க்கடியேன்.**



## தூத்துக்குடி காரப்பேட்டை.

இப்பேட்டையின் சீர் திருத்த விஷயமாய் 8–9–18ல் சபை கூடப்பட்டு அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

(1) முன் நடந்த மீட்டிங்கில் தீர்மானம் செய்தபடி பேட்டைகட்டிடங்களின் வாடகை முன் பாக்கிஜாப்தாவும் ஏலத்துக்கு விடப்பட்ட கட்டிடங்களின் நிதானவாடகை ஜாப்தாவும் கொண்டுவரப்பட்டு சபையோரால் சரிபார்க்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

(2) பேட்டைக்கட்டிடங்களின் பிளானும் அளவும் கொண்டுவரப்பட்டு சபையோரால் சரிபார்க்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது-

(3) நிதான வாடகை ஜாப்தாப்படி நாளது ஆவணிமீ 30உ வரை வாடகைப்பாக்கிகளை அவரவர்கள் கணக்கில் பற்றெழுதி நாளதுவரை ஐந்துகை முடித்துக்கொடுக்கும்படியாய் மக-ள-ள-ஸ்ரீ அரி. அ. சுப்பையா நாடார் அவர்களை நியமிக்கப்பட்டது.

(4) ரெகுலேஷனை அசல்க் காப்பி எழுதி அடுத்த மீட்டிங்குக்கு கொண்டுவரும்படியாய் இரண்டுமெம்பர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

(5) ரெகுலேஷன் விஷயமாயும் கலைக்கு சம்பந்தமாயும் ஏற்படுகிற செலவுகளையும் மற்றும் அவசியமான சில்லறைச்செலவுகளையும் மக-ள-ள-ஸ்ரீ அரி. அ. சுப்பையா நாடாரவர்கள் கொடுத்துக் கணக்கில் பற்றெழுதிக் கொள்ளும்படிக்கும் தீர்மானம் செய்யப்பட்டது.

(6) மக-ள-ள-ஸ்ரீ அரி. அ. செ. கந்தசாமி நாடாரவர்களையும் நிர்வாக சபை மெம்பர்களிலொருவராகத் தெரிந்தெடுக்கப்பட்டது.

(இத்துடன் சபை கலைந்தது.)

## நாடார்கள் முற்கால தற்கால நிலைமை

(145-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதில் நாடார்களுடைய மேன்மையும் மேலோங்காமற் போகுமா? போகாது. அப்போது பாண்டியர்களுடைய எதிரிகள் நாயக்கமாரை வால் பிடித்துக்கொண்டு நாடார்களை படுகொலை செய்ததுபோல் பிரிட்டிஷாரை

யும் வால் பிடித்து பாண்டியர்களுடைய வைராக்கிய சித்தத்தைக் குலைத்து இன்னமும் பின்னிடச்செய்ய வேணுமென்று முயற்சித்தார்கள். காருண்ய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரோ ஜாதி விஷயத்திலும் மத விஷயத்திலும் தலையிடுவதில்லையென்றும், உலகத்தில் யாருடைய சுதந்தரத்திற்கும் பங்கம் விளைவிப்பதில்லையென்றும், விளைவிப்பவரை விட்டுக்கொண்டிருப்பதில்லையென்றும் பகிரங்கமாய் வெளியிட்டுவிட்டதால், யெதிரிகளுடைய சாயம் பிடிக்காமற் போய்விட்டாலும் பாண்டியர்கள் மீதுள்ள பகையை மாற்றின்பாடில்லை.

வரவரப் பிரிட்டிஷ் ராஜ்யம் வலுப்படவே பாண்டியர்களுடைய பூர்வ நிலைமை முற்றிலும் வெளிவந்துலாவித் தாங்கள் பூர்வத்தில் இழந்த கல்வி செல்வம் நாகரீகமுதலியவைகளை மீண்டும் பெறலாமென்ற நம்பிக்கையோடு உலகத்தாருக்கும் ராஜாங்கத்தாருக்கும் ஆதிமுதற் தாங்கள் பாண்டிய குலத்தவர்களென்று பற்பல ஆதாரங்களோடு விரித்துரைத்ததுமின்றி ஒவ்வோரிடங்களிலுமுள்ள ஆலயப்பாத்யதைகளையும் அடைய முயற்சித்தும் அடைந்தும் வந்தார்கள்.

இதுவரையும் இவர்கள் வர்த்தகம் விபசாயம் முதலியவைகளைச்செய்து பொருளீட்டல்வகையில் மேனோக்கி நின்றார்களேயன்றி, ஆங்கிலபாஷை கற்று ராஜீய விஷயத்தில் மேற்போகாமலிருந்துவந்தார்கள். மற்றவர்களோ, பிச்சையெடுத்தாவது ராஜ்ய பாஷையைக்கற்று பற்பல உத்தியோகத்திலமர்ந்துவந்தார்கள். உத்தியோகமோடியதிகப்பட்டுப் பழைய பாண்டியர்கள் மீதுவிரோதங்காட்ட வாரம்பித்தாலும் பிரிட்டிஷ் கவர்ண்மெண்டாருடைய வன்மையின் தன்மையால் அவர்கள் பகை அந்தரங்கமாகவே யிருந்தது. கலி 5001-ல் கமுதிக்கோவில் சம்பந்தமாய் ஒரு பிராஸ்தாபத்தை யுண்டுபண்ணிக் கேசெடுத்தார்கள். அக்கேசில் இருதரத்தார்களுடைய சாட்சியங்களையும் விசாரித்து வருமாதிரியிலிருந்து நாடார்களுக்கே அனுகூலமாகி வருகிறதென்பதையும் பிரிட்டிஷ் ராஜ்யம்தோன்றியபின் நாடார்களுக்கு எதிரிகளாலிருந்த பெரியபயம் அற்றுப்போனதால் நாடார்களுக்குள் முன்னிருந்த ஒற்றுமைகளெல்லாம் வர வரக் குறைந்து ஒருவருக்கொருவர் அபிமானத்துடன் ஒத்தாசை செய்கிறதென்ற வாமுறை குறைந்து கொஞ்சம் பெலஹீனமாயிருக்கின்றார்களென்பதையும் அறிந்த எதிரிகள் தேசத்திலுள்ள பாமர ஜனங்களை விட்டேவி நாடார்கள் வசிக்குமிடங்களைக் கொள்ளையடிக்கும்படி செய்தார்கள். மகாராணியம்மாளே கொள்ளையடிக்கும்படி ஆர்டர் கொடுத்துவிட்டார்களென்ற ஓர் கட்டுமானத்தையுங்கட்டிவிட்டார்கள். மூர்க்கக்குணமுடைய போக்கிரி மடையர்கள் குக்கிராமங்களில் சிலதைக்கொள்ளையடித்தார்கள் அக்கிராமவாசிகள் கூக்குரல் ஆங்கில அதிகாரிகள் காதுக்



கெட்டாதபடி கீழுத்தியோகஸ்தர்கள் மறைத்துவைத்தார்கள். ஆகவே பாமர ஜனக்கூட்டங்கள் சிறிய கிராமங்களில் சிலவெற்றிகள் கிடைத்ததை மனதிற்கொண்டு பெரிய நகரங்களையுந்தாக்கி பொன்னை வாரியெடுக்கலாமென்று போய் வாயில் மண்ணைவாரிப்போட்டுக்கொண்டு வந்தார்கள். அவ்வகையில் பாமர ஜனங்களும் கீழதிகாரிகளும் ஜெயில் வாசம் பெற்றார்கள். அனேகர் ஊரை விட்டோடி மாண்டுபோனார்கள் பலர் தற்கொலை செய்துகொண்டார்கள் நாடார்குல நண்பர்களே! அச்சமயம் பற்பலஜாதிகளும் ஒன்றுசேர்ந்துகொண்டு நம்மவர்கள் வசிக்கிற கிராமங்களில் செய்த கொடுமையை நினைத்தால் மனம் துடிக்கின்றது. அதாவது அருப்புக்கோட்டைக்குத் தெற்கே நாலாவது மயிலிலிருக்கும் ஒரு கிராமத்தில் கொள்ளைக்காரர்கள் கலகம்செய்து சில சொத்துக்களை அடித்துக்கொண்டு போய்விட்டார்களென்று அருப்புக்கோட்டைக்குச் செய்தி கிடைத்தவுடன் இங்கிருந்து அவர்களுக்கு உதவியாக இரண்டு போலீஸாரும் ஒரு இன்ஸ்பெக்டரும் நாடார்களில் எட்டுப்பேர்களும் போயிருந்தோம் அப்போது கொள்ளைக்காரர் சொத்துக்களுடன் பக்கத்துக்கிராமத்திலிருப்பதாய்த் தோன்றி அங்கு சென்றோம் அக்கிராமத்தில் கொள்ளைக்கூட்டத்தார் அதிகமாயிருந்தபடியால் எங்களையும் போலீசாரையும் கிராமத்திற்குள் செல்லவிடாமற் தாக்கினார்கள். ஆனாலும் ஆத்திரத்தோடு போலீஸாரை நம்பி யுள்சென்றோம் இருபக்கமும் கலகம் வலுத்துவிட்டது எங்களில் நாலுபேர்கள் படுகாயப்பட்டார்கள் போலீசாருக்கும் நல்லசாப்பாடு கிடைத்தது இன்ஸ்பெக்டரவர்களும் பின்வாங்கிவிட்டார் நாங்கள் யுத்தமுறையில் எங்கள் தலைவர்களிடம் கொஞ்சம் பழகியிருந்தபடியால் நாங்கள் மட்டும் எதிரிகளிடம் அடிபடாமல் பின்வாங்கிவந்து இன்ஸ்பெக்டரவர்களைக் காப்பாற்றினோம். ஐயோ! பாவம் இன்ஸ்பெக்டரவர்கள் கையில் ரிவால்வரிருந்தும் பெண்டுகள் குலவையிட்டோடிவரும் சப்தத்திற்கு அஞ்சி ஒழித்தார். எப்படியுந்தப்பி ஊர்வந்து சேர்ந்தோம் பாருங்கள் நம்மீதுள்ள பொறாமையினாலே அடிபட்ட போலீசாரையும் மறைத்து அக்கிராமத்தில் கலகம் பிரமாதமாய் நடக்காததுபோல பாவனைகாட்டி மேலுத்தியோகஸ்தரை ஏமாற்றிவிட்டார்கள் கொள்ளைக்கூட்டத்தாருடைய கொடுமையைக்காட்டிலும் கீழுத்தியோகஸ்தர்கள்செய்த கொடுமை ஆற்றொணாக்கொடுமை.

சகோதரர்களே நம்மவர்கள் சொத்துக்களையும் பறிகொடுத்து அடியும் பட்டு பெண்டுபிள்ளைகளுடன் திண்டாடிநிற்கும்போது நாடார்குலத்தில் பிறந்த ஒரு வாலியன் இன்ஸ்பெக்டராக கையில் ரிவால்வருடனிருந்தால் கொடுமையைப் பார்த்துக்கொண்டிருப்பானா? நம்மவர்கள் ஏர்க்கணவே படியாமலும் உத்தியோகங்களிலமராமலும் சோம்பேறித்தனமாயிருந்து வந்திருப்பதினாலேநமக்கு இப்பேர்ப்பட்ட தீங்குநேர்ந்ததென்று ஏன் சொல்லக்கூடா

து? பிரிட்டிஷ்ராஜ்யத்தின் பலமானபிடி நமக்கிருக்கிறதென்றுநம்முடைய பூர்வ பராக்கிரமங்களையுமிழந்து திண்ணை தூங்கிச்சாமிகளைப்போல் இன்னமும் கண்ணை மூடி மூடிவிழித்தும் கையைமுருக்கிக் கொட்டாவியிட்டுகொண்டிருப்போமானால் உலகத்தார்மேலேறிச் செல்கின்ற பாதைக்கு மிதியலகையாவோமென்பதற்குத் தடைவேறுண்டோ.

இதுவரையும் நாடார்கள் பாண்டியகுலத்தவர்கள் அல்ல அவர்கள் ஒரு தாழ்ந்தவகுப்பினர் பாண்டியர் முடியிழந்தவுடன் அவர்கள் சந்ததியே அழிந்துபோனார்களென்று வாய்ப்பறை யறைந்துவந்தவர்கள் பிரிட்டிஷ் ராஜ்யத்தில் எம்மதத்திலும் சம்மதம்போல்ச் சேர்ந்துகொள்ளலாம் எச்சாதி மகுடத்தையும் அச்சமில்லாமற் சூட்டிக்கொள்ளலாமென்றானவுடனே பாண்டியகுலத்தவர்கள் நாங்கள் தான் நாங்கள் தான் என்று கத்திக்கொண்டுவருகின்றார்கள். மாசற்ற மன்னர்குல நாடார்களை பாண்டியர்களல்லவென்று ஒதுக்கிவிட்டு உன்தகப்பன் யாரென்று கேட்டால் முத்துக்கருப்பன்—உன் தாய் ஆரென்றுகேட்டால் சோணக்கருப்பன்மனைவி என்று வாய்கூசாமல் சொல்லும் ஒருவனைபாண்டியகுலத்தவனென்று சொல்ல இவ்வுலகம் சம்மதிக்குமா கற்றறிந்தமேதாவிகள் இம்மதியுடையவர்கள் முகத்திற் காரியுமிழவுமாட்டார்களா, நிற்க.

பாண்டியர் ராஜ்ய மிழந்தவுடன் நாயக்கரும் அதன் பின்மகம்மதியரும் ஆண்டார்கள். அப்போது அவர்கள் வெகுதூரதேசத்திலிருந்து அவர்கள் ஜாதிக்காரர்கள் கொஞ்சம்பேர்கள் தான்வந்திருப்பார்கள் இப்போது ஆங்கிலேயர்கள் மேலதிகாரிகளாகவே யிருப்பதுபோல் அவர்கள் மேலதிகாரமட்டுமே வகித்துக்கொண்டு ஆங்காங்கு அமைதியோடிருப்பதற்காக வேண்டி எவ்விடங்களில் எச்சாதியார்கள் அடர்த்தியாயும் செல்வாக்காயும் வசிக்கின்றார்களோ அவர்களிலொருவனுக்கு அதிகாரத்தைக்கொடுத்து சிறு சிறு பாளையப்பட்டுகளாகவும் ஜமீன்களாகவும் வகுத்து வைத்தார்கள். அவர்களில் இன்னும் அனேகர் ஜமீன்தாராகவு மிருக்கின்றார்கள் அவர்களும் பாண்டிய குலத்தவர்கள் நாங்கள் தானென்று சொல்லுகின்றார்கள். நாடார்குல நண்பர்களே, இன்னும் எந்தெந்தச் சாதிக்காரர்கள் பாண்டியகுலத்தவர்களென்று சொல்லிக்கொண்டாலும் சரி பாண்டிய குலத்தவர்களென்றும் சொல்லிக்கொண்டே பாண்டிய குலத்தவர்களுடைய ஒழுக்கம்போலும் நீதி நெறிபிசகாமலும் பொறாமை யகங்காரம் புறங்கூறல் முதலிய தீச்செயல்களைச் செய்யாமல் ஜீவிக்கட்டும் விட்டுகொடுப்போம். ஆனால் நாடார்குலத்தவர்களை பாண்டியர்களல்லவென்று கூறவருவார்களானால் நாம்பார்த்திருக்கமுடியாது.

மேலும் பாண்டியவம்சாவழிகள் நாடார்களல்லவென்றும் அவர்கள் அழிந்து போனார்களென்றுபுகலும் போலி ஞாயத்திற்குத்தக்க நீதிஞாயம்புகட்டுவோம். ருஷியசக்கிரவர்த்தியும் பெல்ஜியஅரசரும் செர்வியஅரசரும்



கிறீஸ் அரசரும் மாண்டி நிக்ரோஅரசரும் பிசாசுக்குணமுடைய ஜெர்மானியர்களால் தங்களுடைய நாடிழந்தவுடன் அவ்வரசரும் அவ்வரசர்சாதியார்களும் அழிந்துபோகவில்லை யென்பதே போதியசான்றும் நிற்க. சேர சோளபாண்டிய தேசமென்ற மூன்றிலும் பாண்டிய தேசத்தில்தான் தமிழ்விர்த்தியானது அதுபற்றிப் பாண்டியனுக்கு தமிழ்நாடன்என்ற ஒரு பெயருமுண்டு. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கெல்லாம் காதைவளர்க்கும்படி ஒரு பாண்டியன் ஆக்ஞாபித்தான். ஏனென்றால் பெண்களுக்கு வள்ளிக்கொடிபோல் வளர்ந்தகாதுதான் நாகரீகம் என்ற நம்பிக்கைகொண்டு செய்திருக்கிறார் அதுமுதல் பாண்டிநாட்டிலுள்ள பெண்களுக்கெல்லாம் காதுவளர்த்தேவந்திருக்கிறார்கள் இப்போதும் காதுவளர்க்கும் பெண்ணின் ஜாதியார்கள்தான் பாண்டிதேசத்தின் இயற்கைகுடியானவர்கள் என்பதை அறிந்துகொள்ளவும். இந்த நேரம் பாண்டியதேசத்தில் தெலுங்கு கன்னடம் மலையாளம் சௌராஷ்டகம் இந்துஸ்தான் முதலிய பலபாஷைகள் பேசுகிறவர்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டு தமிழ் பேசுகிறவர்களையெல்லாம் ஒன்றுகூட்டி அதில் பாண்டியகுல அரச சந்ததியார்கள் யாரென்று நிர்மல சிந்தையோடு பார்ப்போமானால் அப்பாண்டிய குலத்தவர்கள் நாடார்களேயன்றி வேறல்ல வென்பது நன்குபுலப்படும்.

சுமார் ஆறுவருஷங்களுக்குமுன்னமேயும் தென்இந்தியாவில் க்ஷத்திரியர்களில்லையென்று கற்றறிவாளர்களும் பத்திரிகைகளில் வாதித்தார்கள் அப்போதும் உண்டுமென்று பத்திரிகை மூலமாகவே தக்கவிடையளித்திருப்பதை இங்கு குறிப்பிடுவோம்.

ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமணியஐயரவர்கள் காலத்தில் பரிதாபி௵ கார்த்திகை மாதம் 21௳ 5–9–12ல் வெளியான சுதேசமித்திரன் பத்திரிகையில் 3வது பக்கத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

தென்னிந்தியாவில் க்ஷத்திரியர்.

சென்ற 1912ம் ௵ நவம்பர் ௴ 29௳ வெள்ளிக்கிழமை மித்திரன் சப் எடிட்டோரியலில் ஸர்ஜேம்ஸ் மெஸ்டனும் க்ஷத்திரியர்களும் என்னுமகுடத்தின்கீழ் க்ஷத்திரியர்கள் வடஇந்தியாவில் மாத்திரம் சென்ஸெஸ் கணக்குப்படி யிருப்பதாயும் தென்னிந்தியாவில் இல்லாததாகவும்குறிப்பிட்டிருக்கிறது. அப்படி சென்ஸெஸ்கணக்கில் தென்னிந்தியாவில் க்ஷத்திரியர்கள் இருப்பதாகக் காட்டாமைக்குக் காரணம் சென்ஸெஸ் கீழுத்தியோகஸ்தர்களாகிய பிராமணர்களுக்கு பொறாமையாலும் அறியாமையாலும் ஏற்பட்டதென்பது பத்திராதிபரும் மற்றோரும் அறிந்த விஷயம்.

இத்திராவிடதேசத்தை யாண்ட, ஆரிய க்ஷத்திரியர்களாகிய சூரிய சந்திரகுலத்துதித்த சேரசோழபாண்டிய ராஜாக்கள் இத்தென்னிந்தியாவை

வெகுகாலம் ஆண்டு வந்ததைச் சரித்திரங்களால் பலரும் அறிந்திருப்பார்கள் என்பது தெரிந்த விஷயம் பிராமணர், வைசியர், சூத்திரர் இன்னும் மற்றவரும் வம்ச பரம்பரையாக யேற்பட்டு வருவதைப்போல க்ஷத்திரியர்களும் பரம்பரையாக ஏற்பட்டு வருவது கடமையல்லவா. தென்தேசத்தில் வசிக்கும் நாடார்கள் சந்திரகுல பாண்டிய வம்சத்தவர்கள் என்பது பலரும் அறிந்த விஷயம் தென்னிந்தியாவில் ஸமார்த்தசைவத்தலைவராகிய லோக குரு சிருங்கேரிமடத்து ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் தம்முடைய சிஷ்யரான மைசூர் சமஸ்தானம் தாராபுரம் தாலுகா குளஞ்சிவாடி தெற்கேசுர அக்கிராரம் ஸ்ரீ மடத்திலிருந்த சிவசாமிசாஸ்திரி பௌத்திரர் சிவராமசாஸ்திரியாரை நாடார்களுக்கு குலகுருவாக நியமித்து அவருக்கு சௌமிய வருஷத்தில் (கி. பி 1789) கொடுத்த அதிகாரப் பத்திரமாகிய தாம்பிர சாஸனத்தில் நாடார் குல வளமையைப்பற்றி பின்வருமாறு கண்டிருக்கிறது.

"பாண்டிய குலமாயும் சிவகோத்திர சம்பன்னர்களாயும் பாண்டிய தேசத்தில் பிறந்தவர்களாயும் க்ஷத்திரிய வம்சத்தவர்களாயும் இருக்கிற நாடார் குல சமஸ்தத்திற்கும் குலகுருவாய் நேமகஞ்செய்து" யெனக்கண்டிருக்கிறதை, தென்னிந்தியாவில் பலரும் அறிந்திருப்பார்கள் இதோடு இந்தியாக்கவர்ன்மெண்டாருடைய விசேஷ ரிக்கார்டாகிய எபிகிராபியா ........ இந்தியா என்னும் நூலில் நாடார்கள் பாண்டியராஜாக்களின் சந்ததியார்கள் எனப்பட்டிருப்பதும் அறிந்திருக்கக்கூடும் மிஸ்டர் மார்ஸ்டனும் இந்துதேசசரித்திரத்தில் நாடார்கள் க்ஷத்திரிய குலவகுப்பார் என்று அறியப்படும் எனவும் மிஸ்டர் கார்ஸஷும் 1871ம் வருஷத்து குடி மதிப்புக் கணிதம் முதல் வால்யம், 188, 163வது பக்கங்களில் நாடார்களை பூர்வம் நாட்டை யாண்ட அரச சந்ததியார்கள் எனவும் அதிலும் ஆரிய க்ஷத்திரிய வம்மிசத்தில் உதித்தவர்கள் என்று கூறியிருப்பதும் தெரிந்த விஷயமே. இவ்விதமிருக்க சென்ஸெஸ்கணக்கில் தென்தேசத்தில் க்ஷத்திரியர் இருப்பதாக தெரிவிக்காமைக்குக் காரணம் பொறாமையும் அறியாமை யென்பதே யெனத்துணியப்படும். ஆகவே அறிவுடையோர்கள் உண்மைக்கு உத்தாரமாக முன்னிற்கும் நூற்களின் போக்கை ஆழ்ந்து யோசித்து, ஆராயப்புகின் சந்திரகுலபாண்டியவம்மிசத்தவர்கள் நாடார் குலத்தவர்கள் எனவே துணிவார்கள் இவைகளால் தென்தேசத்திலும் க்ஷத்திரியர் இருப்பதாக விளங்கும். 1-12-12-பொது ஜனப்பிரியன்.

இதனால் பூர்வம் பாண்டியர்கள் வம்சாவழிகளும் சான்றோர் குலத்தவர்களுமான நாடார்கள் 500 வருடங்கள்வரையும் பகைவர்களால் ஒளிமழுங்கியிருந்தும் தங்களுக்கு இயற்கையான நல்ல குணங்களினாலே அழிந்துபோ



காமல் ஜீவித்துவந்திருக்கிறார்களென்பது நன்கு வெளியாகின்றன இதோடு நாடார்கள் முற்கால நிலமை சொல்லிமுடித்தோம.

## தற்கால நிலைமை.

நாடார்குல நண்பர்களே! சான்றோர்குலச் சற்சனர்களே! நம்முடைய தற்காலநிலமை எத்தன்மையதாயிருக்கிறதென்பது எல்லோருமறிந்த விஷயமாயிருந்தாலும் அதிலுள்ள பாதகசாதகங்களைத் திருத்திக்கொள்ளவேண்டிய தவசியமென்பதை யுத்தேசித்து அதையும் யிங்கனம் எடுத்துரைப்பவசியமாயிற்று. நம் மூதாதைகளாகிய பாண்டிய அரசர்களாற் கட்டப்பட்ட ஆலயங்களின் பாத்தியதைகளை நமது பகைவர்கள் பிடுங்கிக்கொண்டாலும் அதைப்பார்க்கிலும் மேலான ஆலயங்கள் ஒவ்வொருயிடங்கள் தோறும் நாம் கட்டிவைத்திருக்கிறோம் அது நம்முடைய பக்தினிலை குன்றாமற் காப்பாற்றிவைக்கப் போதுமானதே. நம்முடைய அறிவை விர்த்திபண்ணத்தக்க, கல்விச்சாலைகளும் ஒவ்வோரிடங்களிலும் மேன்மை பெற்றிருக்கிறது. தேகாரோக்கியத்திற்கும் சுகாதாரத்திற்கும் உற்ற நந்தவனம் கிணர் நீராவி முதலியவைகள் நமக்காகவே யெங்கும் ஸ்தாபித்திருக்கிறோம் இதெல்லாம் நம்முடைய பொது மகமைப்பண்டிலிருந்தே நடைபெற்று வருகிறதேயன்றி நமக்காக இராஜாங்கத்தாராவது இதரஜாதி பொதுஜனங்களாவது தேசாபிமானிகளாவது, ஏற்படுத்திக் கொடுத்ததல்லவென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அன்றி, ராஜாங்கவிஷயமும் தேசசேவையும் தெரிந்து செய்யவேண்டிய வகைக்காகவும் இன்னமும் நம் குலம் பலவகையில் மேன்மை பெற வேண்டுமென்பதாகவும் பிரையார், கனம். ராவ்பஹதூர் த. இரத்தினசாமி நாடாரவர்கள் நாடார் மாகாஜனசங்கத்தை பிறப்பித்து வைத்தார்கள் அதிலிருந்து பலயிடங்களிலும் பல சங்கங்கள் தோன்றி முன்னிருந்ததைப்பார்க்கிலும் ஓர் படி முன்னேறியிருக்கிறதென்பதில் தடையே யில்லை. இப்படி நாம் எல்லாவிஷயங்களிலும் கொஞ்சமுன்னேறி கவர்ன்மெண்டிலும் பல உத்தியோகங்கள் வகித்தும் தேசப் பொது விஷயங்களிலும் சேர்ந்து உழைக்கவேணுமென்ற அவா நம்முடைய பால்ய மாணவர்கள் மனதில் அதிகமாய் ஊறிக்கொண்டு வருவதிலிருந்து மற்றஜாதியார்களுக்கும் நமக்கும் எப்போதுங் கச்சியேற்பட்டு கொலை களவு பணச்செலவு முதலியவைகளால் நஷ்டமுண்டாக்கிக்கொண்டுவந்த கொடுமை குறைந்துகொண்டே வருகிற யிந்தநேரத்தில்,

நமக்குள் எங்குபார்த்தாலும் பொதுக்காரியத்தில் மட்டும் சக்ஷிப்பிரதிக்கக்ஷிகள் யேற்பட்டுக்கொண்டு நம்முடைய ஜாதியார்களின் வாலிபர்கள்

அதிகமாய் முன்னேறக்கூடிய வேகத்தைத் தடுத்துக்கொண்டு நிற்கின்றது. அதாவது, சிலயிடங்களில் தலைவர்களாயுள்ளவர்கள் பொது ஜனாபிமானியென்ற பெயரை மேற்போட்டுக்கொண்டு, உள்ளுக்குள் தன்னலத்தையே பெரிதாய்க் கொள்வதிலிருந்து கக்ஷிகளுண்டாகி பொது ஜன நிதிகளையே வீண்விரயம் செய்கிறார்கள் சிலயிடங்களில் பொது நிதியும் போதாமல் சொந்த நிதியும் செலவுசெய்கிறார்கள். சிலயிடங்களில் நமக்குக் கோயிலே வேண்டாம் கல்விதான் முக்கியம் என்று கோயில் ஸ்தாபனங்களை அழிக்க முயலுகிறார்கள். சிலயிடங்களில் கோயிலே முக்கியமென்று கூத்தாடுகிறார்கள். சிலயிடங்களில் எதுஎப்படி அழிந்து போனாலுஞ்சரி நாம் பிடித்த பிடியை விடுகிறதில்லை எங்கள் மனோபிடஷ்ம் நிறைவேறுகின்ற விஷயத்தால் எந்தப் பொது ஸ்பதானம் அழிந்தாலும் பாதகமில்லையென்று கெய்சர் வாய்மொழி கூறுகின்றார்கள். இந்த விதமான பல சிக்கல்கள் ஏற்பட்டிருந்த போதிலும் தன்னலங்கருதாது பொது ஜன முன்னேற்றமே தன்னேற்றமாய்க் கொண்ட புண்ணிய புருஷர்கள் ஒவ்வொரிடங்களிலும் இருந்துவருவதினால் முழுக்கட்டும் அழிந்து போகாமல் நிலைத்து நிற்கின்றது.

ஆனால் நம்முடைய நன்மைக்காக நம்முன்னோர்களும் தற்காலமுள்ளவர்களும் ஏற்படுத்திவைத்திருக்கின்றகோயில், குளம், கிணர், நந்தவனம் வித்தியாசாலை, சங்கம், முதலியவைகளில் நமக்கு வேண்டாதது இது என்று யாராலும் ரூபிக்க முடியாது. இதோடு இன்னும் அனேக சாதகங்கள் வேண்டியதிருக்குமே யன்றி வேண்டாத தொன்று மில்லை யென்பதும் இதுவேணும் அதுவேண்டாமென்று விவாதம் பண்ணுந் தலைவர்களுக்குந் தெரிந்துதானிருக்கிறது. அப்படியிருந்தும் மனப்பால் குடித்துக்கொண்டு வாலிபர்கள் முற்போக்கைத் தடுத்து நிற்கிறார்கள். பொதுக்காரியத்தில் விவாதத்தைக் கிளப்பி, ஒருவருக் கொருவர் காரியத்தை விட்டுக்கொடுத்து தாழ்ந்து போகமாட்டோமென்று சாதிக்குந் தலைவர்கள் தங்கள் தங்கள் சொந்தக்காரியத்தில் எதிரிக்குத் தாழ்வு காட்டிக் கொள்ளுகிறார்கள். அதாவது பொதுத் தலைவர்களாகிய ஆ. என்பவரும் பா. என்பவரும் பொது விஷயமாக விவாதம் பண்ணிக் கொண்டிருப்பவர்களென்று வைத்துக்கொள்வோம். இவ்விருவர்களில் ஒருவர் வீட்டில் கல்யாணம் கூடிவிட்டால் இருவரும் கைகோர்த்துக்கொள்கிறார்கள். ஒருவர்வீட்டில் ஒரு இழவு விழுந்து விட்டால் இருவரும் கழுத்தைக் கட்டிக் கொண்டளுகிறார்கள். நம்போன்ற ஒருவர் அவர்களிருவரிலொருவரைக்கண்டு என்னய்யா நீங்கள் பொதுக் காரியமாய் வீண்விவாதம் பண்ணிக்கொண்டொருவருக்கொருவர் தாழ்ந்து போகமாட்டோமென்று பொது பணத்தைக் கோர்டின்வாயிலில் கொட்டிக் குவித்து குஸ்திபோட்டீர்கள் இப்போது ஏகபோகமாய் இரு



பேரும் கைகோர்த்தும் கழுத்தைக்கட்டியும் கொண்டீர்கள் ஆனால் இது சொந்தக்காரியம் அது அன்னியகாரியம் அது எப்படியானாலும் சரியென்ற வெண்ணமா வென்று கேட்கும்போது அவர் என்ன சொல்லுகிறாரென்றால்.

தம்பி, விஷயம்வேறு எப்படி என்றால் என்னுடைய மனைவியின் அண்ணாச்சிமகளை அவருடைய மகள் பிள்ளை பேரனுக்குக் கட்டிக்கொடுத்திருக்கிறது. ஆனதுபற்றி வீட்டிலுள்ள பெண்பிள்ளைகள் நன்மை தீமைக்குமா நாம் வேறுபட்டு நிற்கவேண்டும் என்று பிடிவாதம்செய்தார்கள். ஆகையால் அச்சமயம் அப்படியிருக்க வேண்டியதானது என்று வெட்கமில்லாமற் சொல்லிவிடுகிறார்கள். ஆகா நாம் எந்த நேரமும் பிடிவாதமாயிருக்கக் கூடாதென்று பெண்களுக்கிருக்கும் புத்திகூட ஆடவர்களுக்கில்லாமற்போனது வெட்கமான காரியமன்றோ. தன்னுடைய மனைவியின் அண்ணன் மகள் ஒருவருக்காக தன்னுடைய வெட்கத்தைக் கக்கத்திலிடுக்கிக்கொண்டவர் பல நூறு ஜனங்களுடைய பரிதாப நிலைமைக்குப் பரிவு கூறித் தங்கள் பிடியை விட்டு நெகிளவுங் கூடாதா? அந்தோ! அந்தோ! எந்தயிடங்களிலும் நாட்டாண்மை அல்லது அம்பலம் என்ற அரசனுக்கு கட்டுப்பட்டவர்களென்பதுபோய் தலைவனில்லாக் குடிகள் போல் தடுமாறி நிற்கின்றார்கள். ஒரு ஊரிலாவது ஒருமனிதன் பேரில் ஏதாவது காரியமுண்டானால் அவன் அவ்வூரில், இன்னாருடைய சொல்லுக்கு இணங்குவான் அன்னவரைக்கொண்டு அன்னவனைச் சமாதானம் சொல்லிக் கொள்ளலமென்ற ஒரு பெரிய ஏற்பாடுங்கூட விட்டுப்போகும்போல் தெரிகின்றது.

இன்னும் வரும்.

---

## பொது விஷயங்கள்.

ருஷிய கவர்ன்மெண்டின் அபிப்பிராயத்திற்கு விரோதமாய் ருஷிய சக்கரவர்த்தினியும், அவரது நான்கு குமாரிகளும், ஏகாடரின்பர்க் என்ற இடத்திற்கருகில் ஓரிடத்தில் கொலை செய்யப்பட்டார்களென்று தெரியவருகிறது.

* * *

பல்லைப் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு ஆசாமிகள் ஒரு பயங்கரமான குற்றத்தைச் செய்ததாக இன்றையத்தினம் (16—9—18) மாஜிஸ்டிரேட் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள். எதிரிகள் இருவரும் இரவு நேரத்தில் முகமூடிய கல்லறைகளிலிருந்து குழந்தைகளைப் பெயர்த்து எடுத்து, ஒரு

குகையண்டை கொண்டுபோய் மாமிசத்தைத் தின்றுவிட்டு குழந்தைகளின்மேல் மூடப்பட்டிருக்கும் துணிகளை அப்புறப்படுத்தி அவற்றை கடைகளில் விற்றுவிடுவது வழக்கமென்று "பம்பாய் கிரானிக்கல்" பத்திரிகை கூறுகிறது.

* * *

திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து இதுவரை 10 லக்ஷ ரூபாய் இரண்டாவது யுத்தக் கடனுக்கு கொடுத்திருக்கிறார்களாம்.

* * *

அடுத்த நவம்பர்மீ முதல் தெய்தியிலிருந்து தபால் பார்சல் விகிதங்கள் உயர்த்தப் பட்டிருக்கின்றன. இரண்டணாவுக்கு 40 தோலா எடையிருந்ததை இனி 20 தோலாவாகக் குறைக்கப்படும்.

* * *

சென்ற நான்கு வருஷகாலத்திலே பிரிட்டிஷ் கவர்மெண்டார் யுத்தத்திநிமித்தம் வாங்கியிருக்கும் கடன்தொகை 804கோடியே 20லக்ஷம் பவுனாகும்.

* * *

மகா யுத்தநிமித்தம் இரண்டு கக்ஷியாளருக்கும் சென்ற நான்கு வருஷகாலத்திலே ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதம் 300லக்ஷமாம்.

* * *

சுமார் 14லக்ஷம்டன் எடையுள்ள கோதுமையும், 310லக்ஷம் பவுன்மதிப்புள்ள சணலும் சாக்குகளும் 22½லக்ஷம் பவுன் மதிப்புள்ள கம்பளமும் கம்பளஉடைகளும் 1917-ம் வருஷத்தில் கிரேட்பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நேச தேசங்களுக்கு இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

---

## யுத்தக் குறிப்புகள்.

மேற்கரங்கத்தில் நமது நேசப்படைகள் செண்ட்குவண்டின் நகரமுள்ள பிரதேசத்தில் ஜெர்மானியரை கடுமையாய்த் தாக்கி சண்டைசெய்து முன்னேறிச் சென்றுகொண்டிருப்பதோடு, அநேகங்கிராமங்களையும் சத்துருக்களுடைய துருப்புகளையும் தளவாடங்களையும் கைப்பற்றிக் கொண்டு வருகிறார்கள். ஜெர்மானியர்



களும் ஏராளமான பீரங்கிகளை உபயோகித்துக் கடுமையாக நேசப்படைகளை பதிலுக்குத் தாக்கிவருகிறார்கள். ஆனால் அவர்களுடைய தாக்குதல் பயன் பெறவில்லை. ஜெர்மானியருடைய அரண் வரிசைக்குள்ளே பிரிட்டிஷார் தங்கள் இருப்பை வலுப்படுத்திக் கொள்வதற்காக அகழ்களைத் தோண்டி பெரிய பீரங்கிகளையும் அமைத்துவருகிறார்கள்.

பால்கன் போர்முகத்திலும் நமது நேசப்படைகள் ஒரு பெரிய வெற்றி யடைந்திருக்கின்றன. அதாவது செர்வியரும் பிரெஞ்சுப்படைகளும் வார்டார் நதிக்கரை நெடுக முன்னேறியிருப்பதால் சத்துருக்கள் மொனஸ்டர் நகரத்திலிருந்து டாய்ரான் ஏரிக்கரை வரையில் 150 மைல் விஸ்தாரமுள்ள போர்முனை நெடுக ஏராளமான தளவாடங்களையும் விட்டு விட்டு அலங்கோலமாய் பின்னடைந்து சென்றுகொண்டிருக்கிறார்கள். இதுவரை பல்கேரியரிடமிருந்து 12,000 சிறையாளர்களையும் 140 பீரங்கிகளையும் பிடித்திருப்பதாயும் சொல்லப்படுகிறது.

பாலஸ்தீன் பாகாணத்தில் வெகுகாலமாய் நமது நேசப் படைகளுக்குத் துருக்கிப் படைகளுக்கும் போர் நடந்துகொண்டுவருவதும், சில மாதங்களுக்குமுன் நமது நேசப் படைகள் சில அசந்தர்ப்பங்களால் பின்னடைய நேரிட்டதும் நேயர்கள் அறிந்த விஷயமே. ஆனால் இப்போது நேசப் படைகளின் வன்மை அதிகரித்து சிறந்த வெற்றி கிடைத்திருக்கிறது. ஜார்டன் நதிக்கு மேற்கே கடற்கரை வரையிலுள்ள போர்முனையில் நமது நேசப் படைகள் துருக்கியர்களை கடுமையாய்த் தாக்கி போர்முனையைப் பிளந்து வெகுதூரம் முன்னேறியிருக்கின்றனர். துருக்கித் துருப்புகளில் இதுவரையிலும் 25,000 பேரும் ஏராளமான தளவாடங்களும் பிடிக்கப்பட்டிருக்கின்றன.

தற்போது எல்லாப் போர்முனைகளிலும் நமது நேசப் படைகளுக்கு வெற்றிமேல் வெற்றியாய் ஏற்பட்டுக்கொண்டு வருவதால் நமது நேசப் படைகளின் வன்மை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே வருகிறதென்பதிலும் கடைசியாய் இந்த மகா யுத்தத்தில் நமது நேச தேசங்களே வெற்றியடையுமென்பதிலும் சந்தேகமுளதோ!

## சிவகாமிசுந்தரி.

ஓர் நவீன தமிழ்க்கதை.

**நமது சிற்றன்னை கொடியவளல்லள்.**

160ம் பக்கத்தின் தொடர்ச்சி.

உன் சிற்றி கொடியவளல்லள் என்று ஸ்தாபிக்க வந்த நீ உன் சின்னம்மாள் எண்ணப்பிரகாரம் தருமதத்தர் தடிக்குமாரசீலசிகாமணியை விவாகஞ்செய்துகொண்டு நீடூழிகாலம் வாழ்ந்திருப்பாய்.” என்று! கோபம் பொங்கிய உள்ளத்தோடு உரத்த குரலிற் கூறினன் சுந்தரலோசனன் அவன் இயற்கையிலேயே சற்று முன்கோபி.

இம் மொழிகளைக் கேட்டவுடன் பெண்மணியின் தேகம் நடுங்கிற்று. புருவங்கள் சிலிர்த்தன. இதழ்கள் துடித்தன. அகத்திற் பொங்கியெழுந்த நாணமும் சோகமும் கோபமும் அவள் தன் சகோதரனுக்கு உத்தரமுரைக்க நாவெடுத்ததைத் தடுத்தன. தலைகுனிந்த வாறே சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். பின்பு தன் முகத்தை நிமிர்த்தி, தன் சகோதரன் முகத்தை உற்று நோக்கிக்கொண்டு உளந்துடிக்க உதடுகள் துடிக்க இனிய தெள்ளிய குரலில் பின்வருமாறு சண்டப்பிரசண்டமாய்க் கோஷிக்கலாயினள்.

அண்ணா! நான் சொல்வதைச் சிறிது கவனமாய்க் கேளுங்கள். தன பெற்றோர்களும் கணவனும் சிற்சில சமயங்களில் புகட்டிய புத்திமதிகளினாலும் பிரபஞ்ச அநுபவத்தினாலும் பெற்ற அறிவேயன்றி கல்வியாலுண்டாகும் சிறந்த நல்லறிவைப்பெற்றிராத ஓர் வயோதிகப் பெண்பால், தனக்கென்றும் இனிய மற்றோர் பெண்பாலாகிய கன்னிகைக்கு நித்திய நிர்ப்பாக்கியத்தைத் தரக்கூடிய ஓர் விஷயம் அக்கன்னிகைக்கு கவலையற்ற வாழ்வைத்தரும் என்று, தன் அறியாமையினால் எண்ணினால் அவ்வயோதிகப் பெண்பாலைக் கொடியவள் என்று எப்படிச் சொல்லலாம். எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி யென்றிருக்க, கல்வியின் வாசனையையே அறியாத ஓர் ஸ்திரீயின் பின்புத்தியைப் பற்றிக் கேட்பானேன். அந்த ஸ்திரீயின் பின்புத்திக்காக அவளைக் கொடியவள் என்று எப்படிச் சொல்லலாம்? பைத்தியங் கொண்ட ஒருவன் தன்னைப் பெற்ற மாதாவையும் தூஷிக்கின்றான், அதற்காக யாவரும் அவன்பால் பரிதாபமுறுவார்களேயன்றி மாதாவைத்திட்டும் மாபாவி என்று ஒருகாலும் அவனை அழையார். அதுபோல், அறியாமை என்ற பைத்தியங்கொண்ட நமது சின்னம்மாளின் பிடிவாதத்திற்காக நாம் அவள் பாற் பரிதாபமுறவேண்டுமேயொழிய அவளைக் கொடியவள் என்று சொல்வது தகுதியல்ல, நள்ளிருளில் நிற்கும் ஒருவன் வெண்மை நிறமெது கருமை நிறமெது என அறிவனோ? அறியாமை எனனும் அந்தகாரத்துள் இருநத நமது சின்னம்மாளுக்கு இவை நன்மையைத்தரும் விஷயங்கள் இவை தீமையைத்தரும்



விஷயங்கள் என்று சரியாக உணரும் நுண்ணிய அறிவில்லாதிருந்தால் அவளைக் கொடியவள் கொடியவள் என்று கூறுவது நியாயமா! அண்ணா! தனவானான ஒரு கணவனைப் பெறுவதே ஓர் பெண் அடையக் கூடும் பேறென எண்ணினள் பேதையாகிய நமது சின்னம்மாள். அவள் அவ்வாறெண்ணியதற்கு அவளது அறியாமையே காரணமன்றி வேறன்று, தக்க கல்வியறிவும் நுண்ணிய ஆராச்சியும் இல்லாதாரிடத்துக் கோபம் பிடிவாதம் முதலிய குணங்கள் இருப்பது சகஜமே. நமது சின்னம்மாள் தன் எண்ணம் நிறைவேறாததால் சோகத்தினாலும் கோபத்தினாலும் தற்கொலை செய்து கொண்டாள். அவள் அவ்வாறு செய்தது பிழைதான். என்றாலும் நாம் அவள் அறியாமைக்காக இனி அவள்பாற் பரிதாபமுறவேண்டுமேயொழிய அவளைக் கொடியவளென்று நிந்திப்பது அழகல்ல. அண்ணா! ஒரு பாத்திரத்தில் அமிர்தம் இருப்பதாக வைத்துக் கொள்வோம் ஒருதாய், பால் தன் குழந்தையின் பசியைத்தணித்து ஆரோக்கியத்தைக் கொடுக்குமென்றெண்ணி, அப்பாத்திரத்திலுள்ள அமிர்தத்தை அக்குழந்தைக்கு அன்புடன் ஊட்டுகின்றாள். ஆனால், அப்பாலில் முன்னமே விஷங்கலந்திருந்தமையால், குழந்தை மரணமடைந்து விடுகிறது. அக்குழந்தையின் தாயைப் பெற்ற மகவைக்கொன்ற பெரும்பாவி என்றழைப்பது தகுதியாகுமோ! பாலில் விஷங்கலந்திருந்தமை அவளுக்குக் கிஞ்சிற்றும் தெரியாது. அமிர்தம் தன் குழந்தைக்கு நன்மையைத்தரும் என்றெண்ணியல்லவா அப்பாலைத் தன் குழந்தைக்கு அவள் ஊட்டினாள். அதுபோலவே, நமது சின்னம்மாள் எண்ணிய விவாகம் எனக்கு சுகவாழ்வைத் தருமென்று அவள் எண்ணினாள். உண்மையில் அவ்விவாகம் எனக்கு அளவற்ற துக்கத்தையும் நித்திய நிர்ப்பாக்கியத்தையும் கொடுக்குமென்று அவள் சிறிதும் உணர்ந்து கொள்ளவில்லை அவள் அவ்வாறு உணர்ந்து கொள்ளாததற்கு அவளது அறியாமையே காரணம்.

ஆகையால் அண்ணா! நமது சின்னம்மாள் நம்மிடத்தில் அத்தியந்த அன்பு வைத்திருந்தாளென்பது மெய். அவள் விரும்பிய விவாஹம் எனக்கு நன்மையைத் தருமென்று அவள் அபிப்பிராயங் கொண்டாளென்பதும் மெய். அவள் கொண்ட அவ்வபிப்பிராயம் தப்பான அபிப்பிராயமென்பதும் மெய். அவள் அவ்வாறு தப்பபிப்பிராயங் கொண்டதற்கு அவளது அறியாமையே காரணமென்பதும் மெய். ஆகையால் உண்மையில் அவள் கொடியவளல்லள் என்பதும் மெய். அவள் கொடியவளென்று நீங்கள் அபிப்பிராயங் கொண்டதும் மெய். அவ்வபிப்பிராயம் தப்பான அபிப்பிராயம் என்று நீங்கள் இப்பொழுது ஒப்புக்கொள்ளவேண்டும்.

“நான் தப்பபிப்பிராயங் கொண்டேனென்பதும் மெய். நான் அவ்வாறு தப்பபிப்பிராயங்கொண்டதற்கு என் அறியாமையே காரணம் என்ப

தும் மெய். என் அறியாமையை நீக்கி அதனாலுண்டாகிய தப்பான அபிப்பிராயத்தை என்னிடமிருந்து ஒழித்தது என் கண்மணியின் கல்வியறிவே என்பதும் மெய்" எனக் கம்பீரக்களிப்புடன் கழறினன் சுந்தரலோசனன்.

"அண்ணா! நான் இவ்வளவு பேசிவிட்டதால் என்னை அதிகப்பிரசங்கியாக நீங்கள் எண்ணலாம். நான் அதிகப்பிரசங்கம் செய்துவிட்டேனென்று நானே ஒப்புக்கொள்ளுகிறேன். என்னை க்ஷமித்துக்கொள்ளுங்கள். ஆனால், இவ்வளவு பேசியதற்குக் காரணம் நீங்கள் கோபத்தில் என்னவோ "நீடூழிகாலம் வாழ்ந்திருப்பாய்" என்றதால் எனக்குண்டாகிய ஆத்திரமேயொழிய வேறல்ல. ஆகையால், என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்." என்றனள் சகோதரி.

"கண்மணி! நான் சொன்ன மொழிகள் இன்னும் உன் மனத்தை நோகச் செய்கின்றனவோ? நான் கோபத்தில் சொல்லிவிட்டேன். நடந்துவிட்ட விஷயங்களையெல்லாம் மறந்துவிடு." என அன்பு நிறைந்த குரலிற் கூறினன் லோசனன்.

"நீங்கள் சொல்லியபடியே நடந்துவிட்ட விஷயங்களை மறந்துவிட்டு வேறு விஷயத்தைப்பற்றி பேசுவோம். சந்திரபுரியில்—" எனக்கூறிய பெண்மணி, வைத்தியர் அருகே வந்து நிற்பதை உணர்ந்து, தான் பேசுவதை நிறுத்தினாள்.

வைத்தியர் வரவைக்கண்ட சுந்தரலோசனன் சோபாவிலிருந்தெழுந்து அவரைச் சோபாவிலுட்காரச் செய்து தானும் அவரருகே இருந்தனன். அவனது பிரிய சகோதரி மாடியைவிட்டகன்று தாழச் சென்றனள்

210789

## அத்தியாயம் 3.

## பேயின் சேஷ்டைகள்.

வைத்தியர் சுமார் ஐந்தடி உயரமும், சற்று, பருத்த சரீரமும், பரந்து திரண்டு கவிந்து விளங்கும் வயிறும், அகன்ற மார்பும், விசால விழிகளும் பரந்த நெற்றியும், அடர்ந்து நீண்டு கறுத்த மீசையும் உடையவர். பூர்வ ஜன்ம புண்ணியத்தால் அவர் சரீரத்தின் நிறமும் மீசையின் நிறமும் ஒன்றாயிருந்ததால் தருமபுரியிலுள்ளார் அவருக்கு, "காக்கா வைத்தியர்" என்ற ஒரு காரணப்பெயர் சொல்வது வழக்கம். வைத்தியத்தில் அதிக தேர்ச்சியுடையவர். தருமதத்தர் வீட்டிலும் சுந்தரலோசனன் வீட்டிலும் இவர் குடும்ப வைத்தியர். தருமபுரியில் நமது லோசனனது முக்கிய நண்பர் இவரே. இவரது பெயர் **சொக்கலிங்கப் பண்டிதர்.** ஆனால் இந்தப் பெயரைச் சாதாரணமாய் ஜனங்கள் வழங்குவதில்லை. அவரைப்பற்றிப் பேசும்பொழுது "காக்கா வைத்தியர்" என்ற பெயர் கூறிப்பேசுவதே வழக்கம்.

(தொடரும்)

**சு. அ. சுப்பராயபிள்ளை, தூத்துக்குடி.**

# முனிவர் ஆயுர்வேதிக் மருந்துகள்.

## ஒரேதரம் பரீக்ஷியுங்கள்.

---

**ராஜசிங்க மாத்திரை:**—புட்டி 1-க்கு அணா 8. வாதசேஷ்டைகள், ஜன்னி, வலிப்புகளுக்கும், கன்று காலிகளுக்கும் மிக்க பிரயோஜனமானது.

**ரோஸ் மாத்திரை:**—புட்டி 1-க்கு அணா 8. சகல ஜுரமும் தீரக்கூடியது. சுகபேதிக்கும் உபயோகிக்கலாம்.

**பாலசிங்க மாத்திரை:**—புட்டி 1-க்கு அணா 10. அரைக்குழந்தைகட்கும் பாலர் சிறுவர்கட்கும் சகல நோய்க்கும் யாதொரு பயமில்லாமல் கையாடக்கூடியது.

**லிலி மாத்திரை:**—புட்டி 1-க்கு அணா 10. காசம், க்ஷயம், இருமல், சுக்குவான் இவைகளுக்கு சிறந்த அனுப்பான மாத்திரை.

**கெர்ப்பயோக மாத்திரை:**—புட்டி 1-க்கு அணா 10. ஸ்திரீகளின் மலடுகள், கெர்ப்ப பூச்சி, சூதக சம்பந்தமான உபத்திரவங்கள் யாவற்றிற்கும் அருமையான சஞ்சீவி. சுகபேதிக்கும் பெரியவர்கள் சாப்பிடக்கூடியது.

**தந்த சூரணம்:**—டப்பா 1-க்கு அணா 5. கல்நார் பஸ்மம் சேர்ந்துளது தந்தநோய் யாவர்க்கும் சிறந்த பற்பொடி.

**திரிபல மெழுகு:**—டப்பா 1-க்கு அணா 8. வாய்வு உபத்திரவங்கள், குன்மம், யாவக்கும் சிறந்த ஔஷதம்.

**கொடோசரி மெழுகு:**—டப்பா 1-க்கு அணா 12. மேகசூடு, மேகத்தினால் வரும் ஊறல், தடிப்பு, வெடிப்பு, புண்களுக்கு பத்தியமில்லாமல் சாப்பிடக்கூடியது. வாதங்களுக்கும் பத்தியமில்லாமல் உபயோகிக்கலாம்.

**ரசகெந்தி மெழுகு:**—டப்பா 1-க்கு அணா 12. துர்ச்செய்கைகளினால் வரும் புண்கள், லிங்கப்புற்று, லிங்கப்புண், கண்டமாலை இவைகளுக்கு அருமையான மருந்து.

**ராஜசிங்க மெழுகு:**—டப்பி 1-க்கு ரூ 1. வாதம், மேகம், இவைகளால் வரும் உளைச்சல், குத்து, வலி திமிர்வாதம், சூலைகட்டுகளுக்கு சாப்பிடக்கூடியது.

**சந்தானக் குழம்பு:**—டப்பி 1-க்கு அணா 12. ஸ்திரீயின் மலடுகளை நீக்கி சந்தானமுண்டாக்கக்கூடியது கைகண்டது.

**தீபாக்கினி லேகியம்:**—டப்பி 1-க்கு ரூ 1. அஜீரணம், வயிற்றுவலி, வயிற்றுப்பிசம், மந்தம், குன்மம் இவைகளுக்குச் சிறந்த லேகியம்.

**சிட்டுக்குருவி லேகியம்:**—டப்பி 1-க்கு ரூ 2-8-0. மேகவெட்டை, வெள்ளை, கெட்ட இரத்தம், இவைகளை நீக்கி, சுத்த இரத்தத்தை யுண்டாக்கி, தாதுவை அதிகப்படுத்தி தேகத்திற்கு மிகுந்த வலிமையும் புஷ்டியையும் தரக்கூடியது.

**கற்பூர சந்தனாதி தைலம்:**—8 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ 1-12-0 நேத்திர நோய் 96-ம், கபால நோய் 40-ம் நீக்கி எண்சாணுடம்புக்கு சுகத்தைக் கொடுக்கக்கூடிய அருமையான தைலம். மயிரும் வளரும்.

**தக்குடாதி தைலம்:**—¼ அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 8. சன்னி வலிப்பு, இழுப்பு, இவைகளில் எவ்வகைக்கும் உள்ளுக்கும், வெளியிலும் உபயோகப்படுத்தக்கூடிய சமய சகாயமான தைலம்.

மருந்துகளின் கேட்லாக்கும் அனுப்பிக்கப்படும்.

அப்பாவு அண்டு சற்குணர்.

முனிவர் மருந்துசாலை, தூத்துக்குடி.